
உ

சிவமயம்

ஓம் ஸ்ரீ பால சுப்பிரமணியாய நமக





# பாலநாதம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



யாழ். காரைநகரைப் பிறப்பிடமாகவும் பூநகரியை வசிப்பிடமாகவும் கொண்ட
ஓய்வு பெற்ற முன்னைநாள் பூநகரி பலநோக்கு கூட்டுறவுச் சங்க
பொது முகாமையாளரும், தற்போதைய
கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளரும் ஆகிய

**அமரர். நல்லதம்பி பாலசுப்பிரமணியம் அவர்களின்**

ஞாபகார்த்தம் குறித்த நினைவு வெளியீடு

# பாலநாதம்

**15-01-2012**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சமர்ப்பணம்

"தந்தை மகனுக்கு ஆற்றும் நன்றி
அவையத்து முந்தியிருப்ப செயல்"

அன்பும் பண்பும் பொறுமையும் பூண்டு

பாசமும் பரிவான பொன்மொழியும்

நேசவிழி அழைப்பும் நெஞ்சாந்த புன்சிரிப்பும்

தூய நெஞ்சத்துடன் ஊரார்க்கு உயிர் தோழனாய்

நல்வழி காட்டி வளர்த்து எமக்கெல்லாம்

பெரு நிழலாய் இருந்து வையத்து வாழ்வாங்கு

வாழ வைத்து எங்கள் அன்பு அப்பாவிற்கு

எங்கள் கண்ணீர் பூக்களை காணிக்கை ஆக்கி

ஆத்ம சாந்திக்கு வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!




இவ்வண்ணம்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவர்"



# அமரர் திரு. நல்லதம்பி பாலசுப்பிரமணியம்

**மண்ணில்: 08-03-1945** **விண்ணில்: 16-12-2011**

## திதி நிருணய வெண்பா

கர வருடம் மார்கழி திங்கள் கனிந்த நாளொன்றில்
அரன் வகுத்த நிதி அபரபக்க சஸ்டித் திதி அதனில் - அருள்நிதி
ஜெயபுரம் முருகபக்தன் வெகு தவத்தான் பாலசுப்பிரமணியம்
இன்ப டுவகெய்தினான் இட்ட முடன் இயம்பு."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ.
சிவமயம்

# பஞ்சபுராணங்கள்

திருச்சிற்றம்பலம்



## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பொண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன் அருவித்திரன் மழலைப் முழவதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம் அறுமே.

## திருவாசகம்

உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன்
பேர் வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன் கற்பனவும்
இனிமையும்
குற்றாலத் தமர்ந்துறையும் கூத்தா உன்
குரைகடிற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துநக
வேண்டுவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

இடர் கெடுத் தென்னை ஆண்டுகொண் டென்னுள்
இருட்டிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ
அடல்விடைப் பாகா அம்பலக் கூத்தா
அயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்து நின் றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

## திருப்பல்லாண்டு

சீருந்திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகம் கழற உளறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

## புராணம்

சிந்தை இடையறா அன்பும் திருமேனி தன்னில் அசைவும்
கந்தம் மிகையாம் கருத்தும் கைவடிவாரப் படையும்
வுந்திழி கண்ணீர் மழையும் வடிவிற்பொலி திருநீறும்
அந்தமிலாத் திருவேடன் தரசும் எதிர் வந்தணைய.

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திரு. நல்லதம்பி பாலசுப்பிரமணியம் அவர்களின் வாழ்க்கைச் சுவடுகள்

ஈழத்திரு நாட்டின் மணிமுடி போல் விளங்கும் யாழ்ப்பாண குடாநாட்டின் வளமிக்க பிரதேசமான காரைநகர் பகுதியில் அமரர். நல்லதம்பி சிவயோகம் அவர்களுக்கு மூத்த மகனாக 1945-03-08ம் திகதி பிறந்தார். இவருக்கு எட்டு பெண் சகோதரிகளும் இரண்டு ஆண் சகோதரர்களும் ஆவார். இவர் சிறுவயதிலே இருந்து செட்டிய குறிச்சி பகுதியில் வசித்து வந்தார். இவர் ஆரம்பக் கல்வியை செட்டிய குறிச்சி பாடசாலையில் ஆரம்பித்து பூநகரி மகா வித்தியாலயத்தில் முடித்தார். இவர் மேடை பேச்சுக்களும், நகைச்சுவை, மேடை நாடகங்களிலும் அனைவரினதும் மனதைக் கொள்ளை கொண்ட வெற்றி வீரனாக திகழ்ந்தார்.

அவர் தனது கல்வியை தொடர்வதற்காக யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியில் உள்ள "உயர்தர கல்வி நிலையத்தில்" கல்வி கற்றார். தட்டச்சு, சுருக்கெழுத்து, ஆங்கிலம் ஆகிய பாடங்களில் தகைமை பெற்று வந்த வேளையில் பருத்தித்துறை புலோலியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சின்னப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும் சகமாணவியுமான சிவமலர் என்பவரை காதல் மனையாக்கி இல்லறமாக நல்லறத்தில் இணைந்து கொண்ட இல்லறத்தின் நல்லத் தோற்றமாக சுரேஸ்குமார், வாசுகி, தேவகி, மேகலை, அமரர். அமரதாஸ், கீதாஞ்சலி, சுகிர்தன், கிருசாந்தன், சுதர்சன் என்னும் முத்தான செல்வங்களை பெற்று எடுத்தனர்.

இவர் 1969, 1970ம் ஆண்டுகளில் ரியூசன் ஆசிரியராக கடமை (யாழ்ப்பாணம்) ஆற்றினார். இதன் பின்னர் 1971-09-05ம் திகதி பூநகரி பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில் எழுதுனராகவும் பின் கிராமியவங்கி எழுதுனராகவும் அதன்பின்னர் கடன் சந்தைப்படுத்தும் முகாமையாளராகவும் பதவி வகித்து வந்தார். இதனைத் தொடர்ந்து 1972ல் கூட்டுறவு சாதாரணம், கூட்டுறவு உயர்தரக் கல்வியினையும் கற்று தேர்ச்சி பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே காலத்தில் இவர் யாழ்ப்பாணத்தில் இருந்து தன் குடும்பத்தோடு 1974ம் ஆண்டு பூநகரி வாடியடியை தன் வதிவிடமாகக் கொண்டார். தனது அன்புச் செல்வங்களையும் வடக்கில் நடந்த அனர்த்தத்தின் மத்தியிலும் தனது கடமை தவறாது செல்வங்களையும் ஊர் மெச்சும் அளவிற்கு வளர்த்து விட்டார்.

1984ம் ஆண்டு வாடியடியில் இருந்து மட்டுவில் நாடு மேற்கில் குடியேறினார். இவரது திறமையை கண்டு 1984ம் ஆண்டு பூநகரி பல நோக்கு கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளராக கடமை ஏற்றார்.

இவ்வாறு வாழ்ந்து வரும் காலத்தில் போர் சூழல் காரணமாக மக்கள் (1991) ஜெயபுரத்துக்கு இடம்பெயர வைத்த வேளையில் பாடசாலை முதல் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் உட்பட அனைத்து நிறுவனங்களும் இடம்பெயர்ந்தது. இவற்றிற்கு கட்டிட வசதிகள் ஏற்படுத்தி இவை இயங்க ஏற்ற பணிகளை ஆற்றியவர்களின் பெயர்களில் இவரின் பெயரும் முக்கியமான ஒன்றாக பதிக்கப்பட வேண்டியது.

இவரது பொதுப்பணி ஈடுபாடு வியாபகமானது. தனியார் போக்குவரத்து கழகம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பூநகரி புனர்வாழ்வு கழகம், செஞ்சிலுவை சங்கம், இந்து இளைஞர் பேரவை ஆகியவற்றின் செயலாளராகவும் தொடர்ந்து அரிய பணியாற்றி அனைவரின் நன்மதிப்புக்கு உரியவராகவும் இருந்தார். G. M. பாலா என்ற பெயர் கிளிநொச்சி மாவட்ட அடங்கிலும் புகழ் பெற்றது.

சமய பணியிலும் இவர் பங்களிப்பு அழப்பரியது. ஜெயபுரம் முருகன் ஒரு கொட்டிலில் இருந்ததை கண்டு மனம் வருந்தி கோயில் திருப்பணியில் எல்லோரையும் இணைத்து கட்டிடமாக்கினார். இதற்கு கும்பாபிஷேகம் செய்து கந்தசஷ்டி, திருவெம்பாவை பூசை, சனீஸ்வரர் பூசை போன்ற பூசைகளை சிறப்பாக நடத்தி மக்களின் மனங்களில் சந்தோஷத்தை ஏற்படுத்தினார்.

பின்னர் 2005ம் ஆண்டு பங்குனி 07ம் திகதி பூநகரி ப.நோ.கூ. சங்கத்தில் இருந்து ஓய்வு பெற்றார். பின்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி மாவட்ட சங்கங்களின் ஒன்றியத்தில் பொது முகாமையாளராக கடமையாற்றினார். 2005-08-16 லீவுடன் மூத்த மகனின் திருமணத்தை நடத்துவதற்காக மனைவியுடன் லண்டன் பயணமானார்.

பின்பு 2006இல் மீண்டும் ஒன்றியத்தில் இணைந்து சிறிது காலத்தின் பின்பு 2007இல் கடற் தொழிலாளர் கூட்டுறவு சமாசத்தின் பொது முகாமையாளராக இறுதிக் காலம் வரை பணியாற்றினார். 2009இல் ஏற்பட்ட போர் அனர்த்தத்தினால் முருகன் கோயில் சிதைவுற்றது. விக்கிரகங்கள் காணாமல் போனமையாலும் கட்டிடங்கள் இடிந்தமையினாலும் மனவேதனைப்பட்டு மக்களிடம் சிறுதொகை பணத்தை சேர்த்து கோயில் கட்டிடத்தை நிர்மானித்தார். இப்படியிருக்கும் வேளை இளைய மகனின் பட்டமளிப்புக்காக 2011-09-05 லீவுடன் லண்டனுக்கு தன் மனைவியுடன் பயணமானார். அங்கு சென்று இளைய மகனின் பட்டமளிப்பு விழாவில் குடும்ப சகிதமாய கலந்து கொண்டு மூத்த மகன் மருமகள் பேரப்பிள்ளைகளுடனும் இன்பமாகவும் இனிமையாகவும் விடுமுறையைக் கழித்தவேளை கடற் தொழிலாளர் சங்க சமாசத்தில் இருந்து பதவி ஏற்கும்படி கடிதம் கிடைக்க பெற்றது. அதுவும் பெரிய சந்தோஷமாக இருந்த வேளை 16-12-2011 அதிகாலை தனது அன்பு மனைவியுடன் உரையாடிக் கொண்டிருந்த வேளையில் அவரின் மடியில் சாய்ந்தபடி தன் மனைவியை பரிதவிக்க விட்டு விட்டு தனது 66வது அகவையில் ஆத்மாக்கள் தவமிருக்கும் நன்நாளிலே ஸ்ரீ முருகன் அடியினை தழுவிக் கொண்டார். புன்னகை அரசன் பாலசுப்பிரமணியம் என்றும் G. M. பாலா இவ்வளவு விரைவாக மக்களின் சேவகனாக ஊர் போற்றும் உத்தமனாக விளங்கி குடும்பத்தின் ஒளி விளக்காக திகழ்ந்தவரின் இச்செய்தியை கேட்ட நண்பர்களுக்கு பேரதிர்ச்சியும் குடும்பத்திற்கு பேரிழப்பும் ஆகும்.

பிறப்பு ஒன்று உண்டெனில் நிச்சயமானது இறப்பு மட்டுமே. எப்போது வரும் எப்போது போகும் என்று எவருக்குமே தெரியாது என்பதை உணர்த்தும்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கலுரை

கிளிநொச்சி பூநகரி பலநோக்கு கூட்டுறவு சங்கம் பொதுமுகாமையாளரும் சமாதான நீதவானும் ஆகிய திரு. ந. பாலசுப்பிரமணியம் அவர்கள் லண்டனில் இறைபதம் எய்தியமை குறித்து 29-12-2011ல் லண்டனில் நடைபெறுகின்ற அன்னாரின் இறுதிக்கிரியைகளின்போது கவிமணி ச. விஜயரத்தினம் அவர்கள் அனுப்பிய இரங்கலுரை.

அமரர் பாலா அவர்கள் பிரிவை தாங்கமுடியாது துயருறும் அவரது துணைவியார் அவர்களே, பிள்ளைகளே, குடும்ப உறவினர்களே, இந்த இறுதி நிகழ்வில் கலந்திருக்கும் அன்பர்களே எல்லோருக்கும் வணக்கம். மீளாத் துயிலில் ஆழ்ந்திருக்கும் எமது பேரன்புக்கும் பெருமதிப்பிற்குமுரிய உறவினரும், நண்பருமான அமரர். பாலா அவர்கள் ஒரு சிறந்த பண்பாளர், தர்மகுணசீலர், சமூகசேவையாளர், ஆன்மீகவாதியுமாவார். ஒழுக்கநெறி, தர்மநெறி, ஆன்மீகநெறி நின்ற கனவனாவார்.

இவர் ஒரு சாயிபக்தருமாவார். பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் கூட்டு வழிபாடு இவருடைய இல்லத்தில் ஒவ்வொரு வியாழக் கிழமைகளிலும் நடைபெறும். இந்த அருள் நிகழ்வின் மூலம் மக்கள் மத்தியில் பக்தியை வளர்த்த பெரியார் ஆவார். இவரது ஆன்மீகப் பணிமுதல் சகல பணிகளுக்கும் இவரது துணைவியாரும் இணைந்து செயல்பட்டதன் காரணமாக இவருடைய குடும்பமே ஒரு தெய்வீகக் குடும்பமாய் விளங்கி நிற்கின்றது.

அமரர் பாலா அவர்கள் சிறந்த கல்விமான் பூநகரி பல.கூ.ச.தில் சாதாரண எழுதுனராகப் பணியாற்றி இவரது பணியின் திறமையால் படிப்படியாக உயர்வடைந்து கிராமிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கி முகாமையாளராக இருந்து பல நோ.கூ.ச.தின் பொது முகாமையாளராக உயர்ந்து பல வருடங்கள் செவ்வனே பணியாற்றிய நுண் அறிவளர். எல்லோரினதும் பெரு மதிப்பினையும் பெற்றவர் ஆவார்.

ஆன்மீகப் பணியிலும் ஆலயங்களிலும் பொது மன்றங்களில் அருளுரைகள் சொற்பொலிவுகள் கூட்டு வழிபாடுகள் நடாத்தி மக்களை இதில் பங்கு பெறச் செய்து தர்ம நெறியை வளர்த்த பெருமகனாவர்.

தந்தை மகத்காற்றும் உதவி அவையத்து

முன் இருக்கச் செய்தல்.

என்னும் வள்ளுவர் கூற்றுக்கமைய குடும்பக் கடமை களையும் செவ்வனே செய்து மக்களைப் படிப்பித்து எல்லோருக்கும் நல்வாழ்வளித்த தந்தையுமாவார். கனிஷ்ட மைந்தனை லண்டன் பல்கலைக்கழகத்தில் படிக்கவைத்து பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ளுவதற்காக தனது துணைவியாருடன் லண்டன் வந்து மகனின் பட்டமளிப்பு விழாவில் கலந்து இன்புற்றிருந்த வேளை இறைவனடி சேர்ந்து தெய்வமானார். இவரது ஆண் மக்கள் இருவர் அவுஸ்ட்ரேலியாவிலும் பெண் பிள்ளைகள் நால்வர் தாயகத்திலும் (கொழும்பு) வாழ்ந்து வருகின்றார்கள். ஒரு மனிதன் பூமியில் புகழுடன் பல ஆண்டுகள் வாழ்ந்தான் என்பது பெரிதல்ல. இவன் இறந்தபின் அவனுடைய பெயர், புகழ் மக்கள் உள்ளங்களில் எவ்வளவு காலம் நிலை நிற்கிறது என்பதுதான் முக்கியமானது.

பூநகரி ஜெயபுரம் ஸ்ரீ முருகன் கோவில் தலைநகராகவும், தர்மகர்த்தாவாகவும் இருந்து பெரும் பணியாற்றி சிறிய கொட்டிலாய் இருந்த கோயிலை பெரும் பணியினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிகட்டிடக் கோயிலாக்கி கும்பாபிஷேகம் செய்து வருடாந்த அலங்கார உற்சவங்கள், கந்தசஷ்டி, சிவராத்திரி, நவராத்திரி, திருவெம்பாவை முதலான இந்துப் பெருநாட்கள் அத்தனையும் சிறப்புற பூசைகள் செவ்வனே நடைபெறச் செய்த ஒரு தர்மவான் ஆவார்.

இவ்வாலயம் தமிழ் ஈழப்போரின் போது சீர் அழிக்கப்பட்டுவிட்டது. தற்போது மீண்டும் இவரது பெரு முயற்சியும் பொது மக்களின் உதவியுடனும் ஆலய திருப்பணி வேலைகள் நடைபெற்று வரும் வேளையில் முருகப் பெருமான் மயில் மீது ஆரோகணித்து ஒரு நொடிப் பொழுதில் லண்டனில் வைத்தே தன்னிடம் அழைத்துவிட்டான். இவரின் மறைவு தமிழுக்கும், சைவ மக்களுக்கும் மாபெரும் இழப்பாகும்.

இவரின் புனித சேவைகளும் ஆண்டாண்டு தோறும் மக்களின் மத்தியில் நிலைத்து நிற்கும்.

**கவிமணி விஜயரத்தினம்** - லண்டன்
முன்னாள் பூநகரி ப.நோ.கூ. ஊழியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்ப் பொருளுண்மையை உணர வேண்டும்

"பிறப்பு என்று ஒன்று இருக்கும் போது
இறப்பு என்பது நிச்சயமானதாகிறது."

இதனைத் தெரிந்தும் கூட சிலரின் மறைவுகளை எம்மால் தாங்கிக் கொள்ள முடியாதுள்ளது. மதிப்புமிக்க ஓய்வுநிலை பூநகரி பல நோக்கு கூட்டுறவு சங்க பொது முகாமையாளர், சமூக சேவையாளர், சமயப்பற்றாளர், சாந்தமே உருவானவர் திரு. ந. பாலசுப்பிரமணியம் அவர்கள் எமது ஆலயம் 1992ம் ஆண்டு ஊர்வலம் சென்றவேளை விநாயகப் பெருமானுடன் இணைந்து ஜெயபுரம் பகுதியில் இறைபணி யாற்றியமை மறக்க முடியாது. வருடாந்தம் நடைபெறும் மஹோற்சவ காலத்தில் வருகைதந்து நாம பஜனை செய்து மக்களை தெய்வீக சிந்தனைகளை தூண்டச் செய்து இறைபணியாற்றி வருபவர் G. M. பாலா என்று எல்லோரும் செல்லமாக அழைப்பார்கள். சிரித்துக் கொண்டு சிறுபிள்ளை போல் பெருந்தன்மையாக நடந்து கொள்வார். தன் இளைய மகனின் பட்டமளிப்பு விழாக்காண லண்டன் சென்றார். அங்கு அவர் இறுதி யாத்திரைக்காலம் அமைந்தமையை யார் அறிவார்கள். 15-12-2011 மாலை 4 மணி இலங்கை நேரம். (Sky)ல் லண்டனில் பாலா அண்ணன் சாமி கும்பிடப் போன நேரம் ஐயப்பசாமியாக சென்று அவருடன் கதைக்கும் பாக்கியம் அடியேனுக்கு கிடைத்தது. ஐயனின் திருவருளேயாம். அப்போது அவர் என்னுடன் பேசும்போது ஐயப்ப சாமியை கண்டு அவர் ஆனந்தக் கண்ணீர் சிந்தியது என் மனத்திரையில் இப்போது காண்கின்றேன். அம்மாவும் கதைத்த 01 மணி நேரத்துக்கு மேல் கதைத்தோம். 16-12-2011 மாலை 4 மணி இயற்கை எய்தினார். பாலண்ணை என்ற செய்தி கேட்டேன். அவரது தரிசனம் இறுதியாக ஐயப்பசாமி தரிசனமாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்துள்ளது. அவரின் ஆன்மீக சேவை இதற்கு வழிகாட்டியுள்ளது. மனம், மொழி, மெய்களால் இறைவனை தூய்மையாக வழிபாடு செய்து வருபவர்கள் இவரது குடும்பத்தினர்.

தனது கடமையை தவறாது செய்து வந்த மக்கள் மனதை இடம்பிடித்தவர். இவ்வகையான இவரது பிரிவுத் துயர்பட வேண்டியுள்ளதாக அமைகிறது. இருப்பினும் இயற்கையை யாரால் வெல்ல முடியும். மெய்ப்பொருள் ஒன்றே வெல்லும்.

மெய்ப் பொருளுண்மையை உணரத் தலைப்பட்டால் இவ்வினைப்புக்கள் இணைப்பல்ல. இது இயற்கையே என்ற உணர்வு ஏற்படும். திரு. G. M. பாலசுப்பிரமணியம் (பாலாண்ணா) ஆன்மா திருக்கைலாயன் திருப்பாதத்தை தாங்கிப் வீரபத்தி பிள்ளையாரைத் துதித்து பிரார்த்திக்கின்றேன்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

**சிவஸ்ரீ கு. சமுகலிங்கம்**

செயலாளர்

வெள்ளிப் பள்ளத்து வீரகத்துப் பிள்ளையார் கோவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சேவையை நேசித்த அழிவில்லா கலங்கரையே*
*ஒளி வீசி என்றும் நிலைத்து வாழ்வாய்*

# அவர் ஒரு உன்னத பிறப்பு

**பா**லசுப்பிரமணியம் என்னும் பெருடன் உலாவி வந்த உயர்ந்த சேவையாளன். எம் கடலவர்க்கு 2007ம் ஆண்டில் கிடைத்த மிகப்பெரும் அனுபவப் புதையல். கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன், சிந்தனைச் சிரிப்பும், திருநீறு அணிந்த முகமும் கணீரென்ற குரலும் இளமைத் துடிப்பும் எதையும் துணிந்து செயலாற்றும் ஆர்வமும், பல இடப் பெயர்வுகளின்போது அசையாத தூணாய் நின்று அனைத்தையும் பாதுகாத்த துணிவும், ஒவ்வொரு கடலவர்களுடனும் அன்பு, கனிவு, இரக்கம், பொறுமை, என்பவற்றை விதைத்து கருணை காட்டும் குணமுடையவரை இழந்தமையானது கரைகாணாப் படகைப் போன்று தடுமாற வைக்கிறது. ஒவ்வொரு கலந்துரையாடலின் போதும் புதுப்புதுச் சிந்தனைகளை வளர்த்து தமிழைத் தழைக்க வைத்த தந்தையவர். அவருடன் உறவாடி மகிழ்ந்த நாட்களும் உளமார உரையாடிய காலங்கள் யாவும் எம் ஒவ்வொருவர் நெஞ்சங்களிலும் பசுமரத்தாணிபோல் பதிந்துள்ளது.

மூடமுடியாத அறிவியல் பெட்டகமே முடிவு காணாத அறிவுப் புத்தகமே உமக்கு இரங்கலுரை வரைவது எம்மால் இயலாத காரியம் இருந்தும் இறைவன் சித்தம் அதுவாகி நெகிழ்ந்து கரைகின்றனர். பூநகரிப் பிரதேச வாழ் மக்களின் மனங்களில் தனக்கெனத் தனியிடம் பிடித்தது மட்டுமன்றி கிளிநொச்சி மாவட்டமெங்கும் அசைவில்லாச் சேவையால் உயர்ந்த சிகரமே. சேவையை நேசித்த அழிவில்லா கலங்கரையாய் ஒளிவீசி என்றும் நிலைத்து வாழ்வாய் ஐயா!

அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினரோடு எமது பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் பணியாளர்களும் அனைத்து சங்க நிர்வாகிகளும் அனைத்து கடற்றொழிலாளர் பெருமக்களும் ஆறாத்துயரைப் பகிர்ந்து அவரின் ஆன்மா சாந்திக்காக என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பூநகரி கடற்தொழிலாளர் கூ.ச.சமாசம்.
தலைவர். பொது முகமையாளர். பணியாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவு அலைகள்

காரைநகர் பகுதியை பிறப்பிடமாகவும் பூநகரியை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி பாலசுப்பிரமணியம் அமரத்துவம் அடைந்துவிட்டார். இவர் பூநகரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பொதுமுகாமையாளராகவும், கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசத்தின் பொது முகாமையாளராகவும் இருந்து இவற்றின் வளர்ச்சிக்காக இப் பகுதி மக்களின் பொருளாதார வளர்ச்சிக்காகவும் அரும் பணி யாற்றியுள்ளார். மேலும் பூநகரி பகுதி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திலும், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திலும் இந்து இளைஞர் பேரவையிலும் தலைவராகவும் செயலாளராகவும், நிர்வாக உறுப்பினராகவும், பொருளாளராகவும் இருந்து அர்ப்பணிப்புடன் பெரும் சமூக சேவையாற்றியுள்ளார். இவர் ஜெயபுரம் ஸ்ரீ முருகன் பல்லவராய கட்டு ஆலயத்தின் வளர்ச்சியில் இவர் ஆற்றிய பணிகள் இப்பகுதி மக்களாய் மறக்க முடியாது. 1991இல் ஜெயபுரப்பகுதிக்கு இடம்பெயர்ந்து வந்த காலம்முதல் அமரத்துவம் அடையும்வரை முருகப் பெருமானின் நினைவாகவே இருந்துள்ளார் என்பதை உணரும்போது அவரின் ஆன்மா எப்பிறவி எடுத்தாலும் இறைவனின் நினைவாகவே இருந்து நிலைபேராகிய எம் பெருமானின் பாதார விந்தங்களை அடையும் என்பது நிதர்சனம் ஆகும்.

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உனையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போதுன் னடியின் கீழிருக்க வென்றார்.

**கோ. அரியநாயகம்**
தலைவர், ஜெ/ய/ அருள்மிகு முருகன் ஆலயம்.
கிராம சேவையாளர், பல்லவராயன்கட்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வையத்துள் வாழ் வாங்கு - வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படுவர்"

## திரு. நல்லதம்பி பாலசுப்பிரமணியம் J.P.

**(பொது முகாமையாளர் க.தொ.கூ.ச. சமாசம்)**

எழில் பொங்கும் பூநகரி பிரதேசத்திலே திகிரி விநாயகர் கோவில் கொண்டெழுந்தருளி அருள்பாலிக்கும் செட்டிய குறிச்சி கிராமத்திலே 08-03-1945ல் பிறந்து செட்டியகுறிச்சி பாடசாலையிலும் யாழ்ப்பாணத்திலும் ஆய கலைகள் கற்று பிறந்த மண்ணிலே தனது பணியினை பூநகரி பல. நோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் ஒரு சாதாரண பணியாளனாக ஆரம்பித்து குறுகிய காலத்தில் பொது முகாமையாளராக நீண்ட காலம் தனது 60வது வயது வரை கடமையாற்றி பின்பு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்தில் கடமையாற்றி சில கால விடுமுறையில் லண்டன் மாநகரம் பிள்ளைகளிடம் சென்ற இடத்தில் 16-12-2011ல் ஆத்மா பிரிந்து இறைவனடி சேர்ந்த தன்னம்பிக்கையின் உருவமான திரு. நல்லதம்பி பாலசுப்பிரமணியம் அவர்களின் ஞாபகார்த்த இதழில் என் இதயத்தில் எழுந்த எண்ணங்களை பகிர்ந்து கொள்ளுகிறேன்.

1976ம் ஆண்டு பூநகரி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திலே கடன் சந்தைப்படுத்தும் முகாமையாளராக பணியாற்றிக் கொண்டிருந்த போது நானும் அச்சங்கத்தின் பணியாளராக இணைந்து கொண்டதன் பேரில் சிலகாலம் எனக்கு குருவாகவும். பின் நண்பராகவும் சம நிலையில் 2004ம் ஆண்டு வரை அச்சங்கத்தில் அவர் பொது முகாமை யாளராகவும் நான் உதவி பொது முகாமையாளராகவும் பணிபுரிந்த காலப்பகுதி ஒரு மறக்க முடியாத இனிமையான காலம். பூநகரி மக்களால் அன்பாக பாலா அண்ணை என அழைக்கப்பட்டவர். சங்கத்துக்கான வளர்ச்சி கருதி முழு நேரமாக தன்னை அர்ப்பணித்து என்னையும் பக்கபலமாக கொண்டு நேரம் காலம் பாராது செயலாற்றிய ஒரு சேவையாளர் என்பதை எவரும் மறக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1991 வலம்புரி இராணுவ நடவடிக்கையை தொடர்ந்து தனது வதிவிடத்தினை ஜெயபுரம் பிரதேசத்துக்கு மாற்றிக் கொண்டார். அங்கு கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் முருகன் தேவாலயத்துக்கு தர்மகர்த்தாவாக செயற்பட்டு தனது சேவையில் ஒரு பகுதி முருகனுக்காக பணி செய்வதே தனது கடன் எனக்கருதிச் செயற்பட்டவர்.

நாட்டின் போர்ச்சூழலில் பூநகரி பல நோக்கு கூட்டுறவுச் சங்கமும் பல தரப்பட்ட நெருக்கடிகளை சந்தித்த போது அந்த மக்களுக்காக பல நோக்கு கூட்டுறவுச்சங்கம் ஊடாக என்னென்ன உதவிகளை செய்ய முடியுமோ அந்தளவுக்கு தனது உடல் நலத்தை கவனிக்காது முருக நாம உச்சரிப்புடன் செயற்பட்ட அன்னார் இன்று அந்த மக்கள் முன் சாந்தியடையாது அன்னிய தேசத்தில் இறைவனுடன் சங்கமித்தமை வரலாற்றில் மாறாத துன்பம் என்றாலும் அன்னாரது முருக நாமமும் 1990ல் இருந்து பகவான் சத்திய சாயி பாபா மீது கொண்ட பற்றுதலும் அவரது வீட்டில் வியாழன் தோறும் ஒலித்த பஜனை நாமமும் எமது காதுகளில் இன்றும் ஒலித்துக் கொண்டிருப்பதாலும் அவரது ஆத்மா பகவானுடன் சங்கமமாகும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

அன்னாரின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்ளாது விட்டாலும் அவரது குடும்பத்தினருக்கும் இறுதிச்சடங்கில் கலந்து கொள்ள முடியாத நிலைக்கு தள்ளப்பட்ட ஸ்ரீலங்காவில் உள்ள மகள்மார், மருமக்களுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து கொள்வதுடன் அவரது ஆத்மா பகவானது பாதங்களை சென்றடைய பிரார்த்திக்கின்றேன்.

"மரணம் என்பது பூமியில் பிறந்த எல்லா ஜீவராசிகளுக்கும் மறக்கப்படமுடியாத ஒன்றுதான். மரணங்கள் கால ஓட்டத்தில் மறந்து போகக்கூடியதும் தான். ஆனால் சிலரின் மரணம் காலத்தை மிஞ்சி நிலைத்து நிற்கக்கூடியது. அந்த வகையில் இவரின் மரணம் கால ஓட்டத்தால் அடித்து செல்லாமல் நிலைத்து நிற்க கூடியது என்பதில் ஐயமில்லை".

**தா. அரியரத்தினம்** J.P.
பிரசித்த நொத்தாரிசு,
திடீர் மரண விசாரணை அதிகாரி (பூநகரி)
கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்ந்த உள்ளம் கொண்ட மாமனிதர் பாலா

பொழுது நன்றாக விடிந்திருக்காது தன் உந்துருளியில் இருந்து ஒளிபாச்சி செல்லமாக அழைக்கும் குரல் நித்திரைத் தூக்கத்தில் சோம்பலில் இருக்கும் எங்களுக்கு கோபம் வரும். ஆனால், அழைத்தவர் அலங்காரமாக அன்பாக இருப்பதால் துள்ளி எழுந்து வினாவினால் முருகனுக்கு பூமாலை, பால், இளநீர் என அடுக்கடுக்காய் கேட்பார். கேட்பவர் கேட்டார் கொடுப்பவருக்கு இன்னும் கொடுக்க வேண்டும் என மனம் வரும் இது எனக்கு மட்டுமல்ல எம் அயலவருக்கும் இது பொருந்தும் அவர் இன்னும் எங்கள் மனதில் எல்லோரிடமும் வாழ்கிறார்.

பாலா என்று செல்லமாக எல்லோராலும் அழைக்கும் இப்புனிதர் என்னோடு கிட்டதட்ட இரண்டு தசாப்தமாக என்னுடன் பழக்கமானவர். இப்பழக்கம் காரணமாக இவருடன் சேர்ந்து பழக வாய்ப்பு கிடைத்தது பெரும் பாக்கியம். இவர் சிறந்த முகாமையாளராகவும் நிர்வாகியாகவும் விளங்கியதால் சமூகத்திற்கு பல தொண்டுகளும் பணிகளையும் ஆற்றி உயர்வடைந்தார். குறிப்பாக இப்புனிதர் தன் மனதை புண்படுத்தி மற்றவர் மனதை வென்றவர். இவ்வுயர்ந்த சிந்தனையால் ஜெயபுரம் ஸ்ரீ முருகன் ஆலயத்தின் சிறப்பான தன் பணியில் இவ்வாலயம் சிறப்படைந்து உயர்வடைந்துள்ளார். இப் புனிதரின் பணி காரணமாக இவரை இறைவன் தன் பக்கம் இழுத்தானோ என்பதனால் அன்னார் லண்டனில் 16-12-2011 அமரத்துவமடைந்ததை கேட்டு அதிர்வு அடைந்தோம். அன்னாரின் இழப்பானது அவர் குடும்பத்தாருக்கு மட்டுமன்றி சமூகத்திற்கும் பேரிழப்பே. அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறேன். இத்துயருற்று இருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றேன்.

**த. ரவீந்திரன்**
அதிபர். கிளி/கரியாலை நாகபடுவான் இலவ.
அ.த.க. பாடசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்மிகு வெள்ளிப்பள்ளத்தி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானம்
ARULMEGU VELLIPPALLATHTHU VEERAKATHTHIPPILLAIYAR THEVASTHANAM
Veravil, Poonakry
பதிவு இல: HA/7/KL/77
T.P 0775835372
......./...../20....

காப்பாளர்கள்

திரு. K.S.
பிரதேச செயலர்
பிரதேச செயலகம்,
பூநகரி

தலைவர்

உபதலைவர்

செயலாளர்

உபசெயலாளர்

பொருளாளர்

ஆலோசகர்

நிர்வாக உறுப்பினர்கள்

## பூநகரிப் பிரதேச சாயி பஜனை நிலையம்
## வேரவில் - பூநகரி

## அமரர். நல்லதம்பி பாலசுப்பிரமணியம்

ஒன்றே குலம் அது மனித குலம்
ஒன்றே மொழி அது இதய மொழி
ஒன்றே மதம் அது அன்பெனும் மதம்
ஒன்றே கடவுள் அவர் எங்கும் நிறைந்தவர் - பாபா

பாலா - மனக்கண்ணில் நீந்துகின்றார். இவ் வாக்கியங்களுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர், வாழ்ந்தவர். இறைவனடி சேர்ந்த தெய்வீக சிந்தனையாளர். பாலண்ணை அவர்கள் பற்றி சிலவரிகள். அழுக வைத்த பகவானுக்கு முதல் வணக்கம்.

கந்தபுராணத்தில் மும்மலங்களாக சூரன், சிங்கமுக சூரன், தாரக சூரன் என்போர் தோற்றம் பெறுகின்றனர். பாலசுப்பிரமணியம் மும்மல காரியங்களையும் அவற்றின் தோற்றப் பொலிவையும் பெறியே கொண்டு வந்து உலகையே உணரச் செய்தார். சூரன் தன் ஆணவமுனைப்பாலேயே தேவாதி தேவர்களை அடக்கி ஒழுக்கினான் என்பது கந்தபுராணம் சுட்டும் செய்தியாகும்.

பாலசுப்பிரமணியம் அவர்கள் பூநகரி பிரதேச சாயி பஜனை நிலைய தலைவராக இருந்து இப்பிரதேச அனைத்து ஆலயங்களிலும் நாம பஜனைகள் சிறப்பாக நடத்தி வந்தார். அமைதியே உருவானவர். சகிப்புத்தன்மை அவரது உயர்வுகளுக்கு உறுதுணையாக அமைந்தது. பகவானின் சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை என்ற ஐந்தும் அவரின் நடத்தையில் காணக் கூடியதாக அமைந்திருந்தது. அவரது சமூக, சமய பணிகள் பூநகரிப் பிரதேச மக்கள் அனைவரின் மனங்களிலும் நிஜமாக நிழலாகத் தெரியும் என்றால் மிகையாகாது. அந்திமகாலம் நெருங்கியது யாருக்கும் புரியவில்லை. ஆனால் அவரின் ஆன்மீக பாதையில் அவர் செல்லும் பயணம் தனது மூத்த மகனிடம் சென்று தனது இறுதிப் பயணத்தினை மேற்க் கொண்டமை அவரின் உண்மைத் தன்மையை உலகுக்கு காட்டியுள்ளார். பகவானின் பக்தராக தன்னையும் குடும்பத்தையும் முழுமனத்துடன் இணைத்து பணியாற்றிய பயனை அடைந்துள்ளார்.

அவரது ஆத்மா இறையின் பக்தியில் திகழ எல்லாம் வல்ல பகவானின் அருளாகி வேண்டிப் பிரார்த்திக்கின்றேன். அவரது குடும்பத்தினரும் மனஅமைதி பெற்று இறை இன்பம் அனுபவிக்கும் தந்தையின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்க வேண்டுமென வேண்டுகின்றோம்.

கிருஸ்ணஜெயம், கிருஸ்ணஜெயம் என்ற பாடல் பாடும்போது என்னுள்ளம் மிகவும் பூரிப்படையும். பக்தர்கள் ஆரவாரம் செய்வார்கள். என் மனக்கண்ணில் நீந்துகிறார் பாலாண்ணா.

**சிவஸ்ரீ கு. சுமுகலிங்கம்**
அமைப்பாளர், வேரவில், பூநகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

**"தமிழோடு இசைப்பாடல் மறந்தறியேன்"**

எனப் பாடினார் அப்பரடிகள். இவ்வகையிலெல்லாம் சிவபிரானின் எல்லையற்ற கருணையினையும், அவரின் வள்ளற்றன்மையையும் சிவனருட் செல்வர்கள் பாடினார்கள். இன்று தோத்திரங்களை மனனம் செய்து இறையன்புடன் நாம் பாடுகின்றோம். ஆனால் நாம்பாடும் இத் தோத்திரங்கள்அனைத்தும் எதனைக் கூறுகின்றன என்ற கருத்தினைப் பற்றி நாம் எண்ணுவது இல்லை. "தோத்திரங்களைப் பாடும்போது இறைவன் புகழ்பற்றி அங்கு யாது கூறப்படு கிறது என்பதை உணர்ந்து ஓதுதல் சாலச்சிறந்தது." எனவே இவ்வகையில் பஞ்சபுராணங்கள் சில தொகுக்கப்பட்டு அவற்றிற்குரிய பொழிப்புடன் இந்நூலில் காட்டப்பட்டுள்ளது. சிவநெறிச் செல்வர்கள் இத் தோத்திரங்கள் வாயிலாக இறைவனின் புகழ் எவ்வாறு எடுத்து இயம்பப்படுகின்றது என்பதை இதன் மூலம் அறியமுடியும்.

மேலும் சைவசமயத்தவர்கள் விசேடமாக ஓதுவதற்கும், சமயதினங்களில் ஓதுவதற்குமான பஞ்சபுராணம், திருப்புகழ், கந்தபுராணம், அபிராமி அந்தாதி, சகலகலாவல்லிமாலை, கந்தசஷ்டி கவசம், சிவபுராணம், திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை, கௌரிக்காப்பு போன்ற அனைத்துத் தோத்திரப்பாடல்களும் இந்நூலில் அடங்கியுள்ளன. இந்நூல் ஒவ்வொரு சைவசமயிகள் கையிலும் இருக்கவேண்டிய திருநூலாகும். இந்நூல் பக்திமணம் கமழும் கற்பூரப் பேழையாகத் திகழ்கிறது. மெய்ஞ்ஞானத்தை அவாவி நிற்கும் அனைவருக்கும் இந்நூல் ஒரு வரப்பிரசாதமாக அமையுமென எண்ணுகின்றேன். இந்நூலைத் தொகுத்து வெளியிடும் பெரும்பேறு பெற்றதற்குத் துணையாக நின்ற எல்லாம் வல்ல நாதன் தாள் பணிகின்றேன்.

**"இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க."**

**ஆசிரியர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வீகத் தோத்திரத் திரட்டு

## உள்ளடக்கம்

- தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம்.

- விநாயகர் அகவல், விநாயகர் கவசம்

- திருப்புகழ், கந்தபுராணம், அபிராமி அந்தாதி, சகலகலாவல்லி மாலை

- கந்தசஷ்டி கவசம், சிவபுராணம், திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவை, கௌரிக்காப்பு, காயத்திரி மந்திரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் தேவாரம்



திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பிறந்த இடம் சோழநாடு, சீர்காழிப்பதி ஆகும். இவரின் தந்தையார் பெயர் சிவபாதவிருதயர். தாயார் பெயர் பகவதியார். பிள்ளைத் திருநாமம் சம்பந்தர். இவர் மூன்று வயதுக் குழந்தையாக இருக்கும் போது **'அம்மே அப்பா'** எனத் தந்தையைக் காணாது அழுதபொழுது உமையம்மையார் ஊட்டிய ஞானப்பாலை அருந்தி இறைவனைக் கண்டு **"தோடுடைய செவியன்"** என்ற தேவாரத்தைப் பாடத் தொடங்கினார். ஞானசம்பந்தம் பெற்ற குழந்தை என்பதால் **ஞானசம்பந்தர்** எனப் பெயர்பெற்றார். **"தோடுடைய செவியன்"** என்ற தேவாரம் திருஞானசம்பந்தர் பாடிய முதலாவது தேவாரம் ஆகும். இது தேவாரங்கள் அனைத்துக்கும் ஆதியானதும் ஆகும். இவர் முத்தியடைந்த தினம் **வைகாசி மூலம்** ஆகும்.

தேவாரம் என்னும் சொல்லுக்கு இறைவனுக்குரிய மாலை என்பது பொருள் ஆகும். இறைவனுக்குச் சார்த்துவதற்காக நாரினாலே தொடுத்த இனிய செந்தமிழ்ப் பாமாலையே தேவாரம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாரம்.

**தலம் :** சீர்காழி **பண்:** நட்டபாடை

**திருச்சிற்றம்பலம்**

1. தோடுடையசெவி யன்விடை யேறியோர்
தூவெண்மதி சூடிக்
காடுடையசுட லைப்பொடி பூசியென்
னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனை நாட்பணிந்
தேத்த வருள் செய்த
பீடுடையபிர மாபுரமேவிய
பெம்மா னிவனன்றே

**திருச்சிற்றம்பலம்**

**பொழிப்புரை :**

சிவபெருமான் தோடு அணிந்த காதினை உடையவராய் இடபவாகனத்தில் வீற்றிருக்கின்றார். இவர் குற்றமற்ற வெண்ணிறமான மூன்றாம் பிறைச் சந்திரனைத் தலையிலே சூடியுள்ளார். சுடுகாட்டுச் சாம்பலை உடலெங்கும் பூசியுள்ளார். அவர் என் மனதைக் கவர்ந்துள்ளார். பல இதழ்களையுடைய தாமரைப் பூவின்மேல் வீற்றிருப்பவரான பிரமதேவன் முற்காலத்தில் வணங்கி வாழ்த்த அவருக்குத் திருவருள் புரிந்தவர். பெருமை பொருந்திய பிரமாபுரம் என்னும் சீர்காழிப்பதியிலே சிவபெருமான் எழுந்தருளி உள்ளார்.

**தலம்** –சிதம்பரம் **பண்-** குறிஞ்சி

**திருச்சிற்றம்பலம்**

2. கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்டிங்கண் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே

**திருச்சிற்றம்பலம்**

**பொழிப்புரை :**

வேதங்களை ஓதி உணர்ந்தவாறு வேள்வித்தீயைப் பேணி வழிபட்டுக் கலியின் கொடுமையை உலகத்துக்கு வராமல் அழித்துக் காக்கும் அந்தணர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழுமிடம் தில்லையம்பலம் ஆகும். அத்தலத்தில் மூன்றாம் பிறைச் சந்திரனை அணிந்து கொண்டு நடனம் ஆடிக்கொண்டிருப்பவருமான நடராஜப் பெருமானின் பாதங்களைப் பூசிப்பவர்களைப் பாவங்கள் ஒருபோதும் சென்று சேராது. விலகிவிடும்.

**தலம் :** திருகோணமலை **பண் :** புறநீர்மை

**திருச்சிற்றம்பலம்**

3. கடிதென வந்த கரிதனை யுரித்து
அவ்வுரி மேனிமேற் போர்ப்பார்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுத லவளொடு முடனாய்க்
கொடிதெனக் கதறும் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமுன் நித்திலஞ் சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றும்
கோணமா மலையமர்ந்தாரே.

**திருச்சிற்றம்பலம்**

**பொழிப்புரை :**

நடமை நோக்கி மிக வேகமாக யானை வடிவம் கொண்டு வந்த கயாசுரனைக் கொன்று, அவன் தோலைத் தம் திருமேனியிலே ஆடையாகப் போர்த்த சிவபெருமான், பெண்யானை போன்ற நடையினை உடையவரும், வளையல்களை அணிந்தவரும், பிறைபோன்ற அழகிய நெற்றியை உடையவருமாகிய மாதுமையாளுடன், கண்டோர் கொடிது எனக் கூறும்படி அச்சத்தைத் தருகின்ற இரைச்சல் பொருந்தி, மக்கள் எளிதிலே பெற்றுக் கொள்ளும் வண்ணம் தன் அலைகளால் முத்துக்கள் எங்கணும் பரவி, அங்கே வாழுகின்ற குடியிடங்களை அணுகிப் பெருக்கெடுத்து ஓடும் கடலின் கரையிலே உள்ள திருகோணமலை என்னும் திவ்விய தலத்திலே சிவபெருமான் எழுந்தருளி உள்ளார்.

**தலம் :** திருக்கோணமலை

**திருச்சிற்றம்பலம்**

4. தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினு(ம்) மனத்து(ம்) மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயிலும் பிணியுந் தொழிலர் பா னீக்கி
நுழைதரு நூலினர் ஞாலங்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே

**திருச்சிற்றம்பலம்**

## பொழிப்புரை :

திருகோணமலையைக் கோயிலாகக் கொண்டு உறைந்துள்ள இறைவன் தாயைக் காட்டிலும் பேரன்புடைய தலைவர் என்று போற்றுகின்ற அடியவர்களின் வாயிலும் மனத்திலும் நீங்காதிருப்பவர்; அடியவர்கள் விரும்பும் வடிவங்களில் வந்து அருளும் வடிவங்கள் பலவற்றில் காணப்படுபவர்; அடியவர்கள் நோயுற்றவிடத்தும் அவர்களோடு நின்று தாமும் துன்பத்தை ஏற்றுக் கொள்ளுபவர்; அன்பர் அல்லாதார் என்று பாகுபாடின்றி எவர் உள்ளத்திலும் நுழைந்து நின்று இயக்கும் ஒழுக்கமுடையவர் ஆவார்.

**பண் :** நட்டபாடை

**தலம் :** திருமருகலும்
திருச் செங்காட்டங்குடியும்

**திருச்சிற்றம்பலம்**

5. அங்கமும் வேதமும் ஓதும் நாவர் அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாட வீதி மருகல் மைந்த சொல்லாய்
செங்கயல் ஆர்புனல் செல்வம் மல்குசீர்கொள் செங்காட்டங்குடி
அதனுள்
கங்குல் விளங்கு எரியேத்தி ஆடும் கணபதியிச்சரங் காமுறவே.

**திருச்சிற்றம்பலம்.**

## பொழிப்புரை:

வேதங்களையும் அவற்றின் அங்கங்களையும் அத்தயயனம் செய்யும் பிராமணர்கள், திருவடிகளை எப்பொழுதும் துதிக்க, வல்லளரே; மாடமாளிகைகள் நிறைந்த வீதியுள்ள திருமருகலில் உறையும் நீர்வளமும் செல்வச் செழிப்பும் மிகுந்த செங்காட்டங்குடியிலே, அனல்தாங்கிக் கொண்டு கூத்தாடும் ஈஸ்வரன் அமர்ந்துள்ள கணபதியீச்சரம்மீது மையல் கொள்ளலாமா? விடை கூறுவீராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண் : கொல்லி

தலம் : கழுமலம் (சீர்காழி)

திருச்சிற்றம்பலம்

6. மண்ணின்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணில்நல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணிநல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

திருச்சிற்றம்பலம்

## பொழிப்புரை:

அர்த்தநாரீஸ்வரர் ஆகிய உமைநாயகர் நம்பிக்கையூட்டும் பெருந்தகையாகத் திருக்கழுமலத்தில் குடிகொண்டிருப்பதால் நாம் இம்மையில் நல்வாழ்வும், மறுமையில் நற்கதியும் அடைய அவனைத் தினமும் மனப்பூர்வமாக வழிபடுவதே நல்லது.

தலம் : திருவாடுதுறை

பண் : காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

7. இடரினும் தளரினு மெனதுறுநோய்
தொடரினு முனகழ றொழுதெழுவேன்
கடறினி லமுதொடு கலந்த நஞ்சை
மிடறினி லடக்கிய வேதியனே
இதுவோவெமை யாளுமா
றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருளா
வடுதுறை யரனே.

திருச்சிற்றம்பலம்

## பொழிப்புரை :

திருப்பாற் கடலிலே அமுதத்தோடு நஞ்சு கலந்தபொழுது அதனைக் கண்டத்தில் அடக்கிய வேதமுதல்வனே! துன்பம், தளர்ச்சி, முற்பிறப்பு, வினைத் தொடர்ச்சி என்றிவ்வாறு எத்தனை துன்பம் உண்டாகினாலும் அடியேன் உமது திருவடிகளையே தஞ்சம் எனத் தொழுவேன்.

திருவாடுதுறையில் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானே! நான் இவ்வாறு தொழ, நீர் எமக்கு ஒன்றும் ஈவதற்கு இல்லையென்றால் இதுவோ நீர் அடியேனை ஆட்கொள்ளும் முறை? (என்று சம்பந்தர் திருவாடுதுறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீற்றிருக்கின்ற செம்பொற்றியாகேசப் பெருமானைக் குறைகூறிப் பொன் வேண்ட இறைஞ்சுகிறார்.)

**தலம் :** திருவாலவாய் **பண் :** கொல்லி

திருச்சிற்றம்பலம்

8. மானினேர்விழி மாதராய்வழு
திக்குமாபெருந் தேவிகேள்
பானல்வாயொரு பாலனீங்கிவ
னென்றுநீபரி வெய்திடேல்
ஆனைமாமலை யாதியாய
இடங்களிற்பல அல்லல்சேர்
ஈனர்கட்கெளி யேனலேன்திரு
வாலவாயர னிற்கவே

திருச்சிற்றம்பலம்

## பொழிப்புரை :

அழகிய மானின் விழியை உடைய மணியே, மாதரசியே, பாண்டிமா தேவியே கேட்பாயாக, பால்மணம் மாறாத சிறுபாலகன் இவன் என்றும், வலிய பலரான சமணரால் எனக்குத் தீங்கு நேரிடலாம் என்று நீர் வருந்தாதீர்; எட்டு மலைகளில் வாழும் எண்ணாயிரம் சமணருக்கும் நான் எளிமையானவன் அல்லன்; திருவாலவாய்ப் பெருமானது திருவருள் எனக்குத் துணையாயுள்ளது. ஆதலால் தீங்கு எதுவும் எனக்கு வராது.

திருச்சிற்றம்பலம்

9. மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான் திருநீறே.

திருச்சிற்றம்பலம்

## பொழிப்புரை :

பெருமைப்படுத்தப்பட்டு பூசிக்கப்படுவதும், தேவர்களின் மேனியில் தரித்திருப்பதும், அழகைத்தருவதும், வணங்கப்படுவதும் திருநீறேயாகும். வேதத்தின் பகுதியாகவுள்ளதும் சைவ சமயத்தவரால் போற்றப்படுவதும் சிவந்த நிறமுடைய பவளம் போன்ற வாயையுடைய உமாதேவியாரைப் பாகமாகக் கொண்டுள்ள திருவாலவாயான் என்னும் திருத்தலத்தில் உறைந்துள்ள சிவபெருமானின் திருமேனியில் உள்ளதும் சிறப்புடைய இத் திருநீறேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தலம் :** திருவலஞ்சுழித் திருப்பதிகம்

**திருச்சிற்றம்பலம்**

**10.** என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து
முன்ன(ம்) நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி ஆதரித் தேத்தியும் பாடியும் வழிபடு மதனாலே.

**திருச்சிற்றம்பலம்**

**பொழிப்புரை :**

மனமே, சிறந்த மணியாகிய முத்துக்கள் பொருந்திய காவிரியாறு சூழப் பெற்ற திருவலஞ்சுழிப் பெருமானை பக்தியோடு பலமுறை வாயாரப் புகழ்ந்தும் பாடியும் வழிபடும்பேறு இப்போது நீ பெற்றுள்ளமையால், பெரிய கடல் சூழ்ந்த இவ்வுலகத்தில் முன்னே நீ செய்துள்ள நல்வினைப் பயன்களுக்கு இடையே இப்பேறு பெறுவதற்கு ஏதுவாய் என்ன புண்ணியம் செய்தாய். அது பெரிது.

## 2. திருநாவுக்கரச நாயனார் தேவாரம்



திருநாவுக்கரச நாயனார் பிறந்த இடம் திருமுனைப்பாடி, திருவாமூர் ஆகும். இவரது தந்தையார் பெயர் புகழனார். தாயார் பெயர் மாதினியார் ஆவர். இவரது இளமைப்பெயர் மருள்நீக்கியார் ஆகும். இவர் இளம் வயதில் கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்கினார். சமணர்களின் வஞ்சனையில் மயங்கிச் சமண சமயத்தில் சேர்ந்தார். திருநாவுக்கரசரைச் சைவசமயத்தில் மீண்டும் சேர்ப்பிப்பதற்காக இறைவன் அவருக்குச் சூலை நோயைக் கொடுத்தார். சூலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயைத் தீர்க்கும்படியும், மக்கள் ஓதி உய்யும்படியும் **"கூற்றாயினவாறு விலக்கிலீர்"** என்னும் பதிகத்தைப் அவர் பாடினார். நோய் தீர்ந்தது. சைவ சமயத்தில் திரும்பவும் வந்து சேர்ந்த அப்பர் பல்வேறு அற்புதங்கள் செய்தார். சைவம் தழைக்கப் பாடுபட்டார். பலதலங்களுக்கும் சென்று தேவாரங்கள் பாடினார். சிவபெருமான் அசரீரியாக அவருக்கு **'நாவுக்கரசு'** என்று பெயர் சூட்டினார். இவர் முத்தியடைந்த தினம் **சித்திரை மாதச் சதையம்** ஆகும்.

**தலம் :** திருவதிகை வீரட்டானம் **பண்:** கொல்லி

**திருச்சிற்றம்பலம்**

1. கூற்றா யினவா றுவிலக் ககிலீர்
கொடுமை பலசெய் தனநா னறியேன்
ஏற்றா யடிக்கே யிரவும் பகலும்
பிரியா துவணங் குவனெப் பொழுதும்
தோற்றா தென்வயிற் றினகம் படியே
குடரோ டுதுடக் கிமுடக் கியிட
ஆற்றே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே.

**திருச்சிற்றம்பலம்**

## பொழிப்புரை :

கெடிலை என்னும் ஆற்றங்கரையிலே, அதிகை என்னும் சிவதலத்திலே எழுந்தருளியிருக்கும் வீரட்டானேச்சரப் பெருமானே! இயமனைப் போன்று துன்பத்தைத் தரும் தன்மையை விலகச் செய்யுங்கள். தீய செயல்கள் பலவற்றை இப் பிறப்பில் நான் செய்திருப்பதை நான் அறியேன். என்னை ஆட்கொண்ட உமது திருவடிகளை எப்பொழுதும் நினைந்து வணங்குவேன். வெளியே தெரியாது.எனது வயிற்றின் உள்ளே (சூலைநோய்) குடலுடனே கட்டி முறுக்கு வதை உமது அடியவனாகிய நான் பொறுக்கமாட்டேன். அதனால் என்னைப் பீடித்துள்ள நோயைப் போக்கி அருளுவீராக.

**தலம் :** திருவையாற்றுத் திருப்பதிகம்

**திருச்சிற்றம்பலம்**

2. மாதர் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடுபடாமல் ஐயா றடைகின்றபோது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொழிப்புரை :

கண்டோர் விரும்பத்தக்க பிறைச் சந்திரனைத் தன் தலையில் மாலையாக அணிந்த பெருமானை மலையரசன் மகளான பார்வதிதேவியுடனே கூடப்பாடி, அருச்சனைக்குப் பூவும் திருமஞ்சனத்துக்கு நீரும் தாங்கித் துதித்துக் கொண்டு போகும் தொண்டர் பின்னே தொடர்ந்து கயிலைக்குப் போகின்ற நான், வந்த சுவடு தெரியாமல் அப்பெருமானது திருவருளால் திருவையாற்றை அடைந்த போது அன்புடைய இளைய பெண் யானையோடு ஓர் ஆண்யானையும் சக்தியும் சிவமும்போல, ஒன்றுபட்டு வருவதைக் கண்டேன். இதற்கு முன் யான் கண்டறியாத அதிசயங்களையும் கண்டேன்.

**தலம் :** கடம்பூர்த் திருக்கரக் கோயில்.

**திருச்சிற்றம்பலம்**

3. நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்கட னடி யேனையும் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே.

**திருச்சிற்றம்பலம்**

## பொழிப்புரை :

கடம்ப மாலையையுடைய முருகனைப் பெற்ற உமாதேவியாரை இடப்பாகமாகக் கொண்டவர் அழகிய கடம்பூர்த் திருக்கரக் கோயிலில் அமிர்த கடேசுவரர் என்னும் பெயரோடு வீற்றிருக்கும் சிவபெருமான் ஆவார். அவரின் கடமை ஏனைய உயிர்களைப்போல அடியேனையும் காத்தலாகும். எனது கடமை அவருக்குத் தொண்டு செய்து வாழ்வதேயாகும்.

**பண் :** காந்தார பஞ்சமம்

**திருச்சிற்றம்பலம்**

4. சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

**திருச்சிற்றம்பலம்**

## பொழிப்புரை :

புகழும், துணையாகவுமுடைய மேலானவனுமாகிய சிவபெருமானுடைய பொன்போன்ற அழகிய இரு திருப்பாதங்களைச் சேரக் கைகுவித்து வணங்கினால், கல்லுடன் சேர்த்துக் கட்டிக் கடலிலே என்னைப் போகவிட்டாலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல துணையாக நன்மை (உதவி) செய்வது **நமசிவாய** என்னும் திருவைந்தெழுத்தே ஆகும்.

**பண் :** காந்தார பஞ்சமம் **தலம் :** பொது

**திருச்சிற்றம்பலம்**

**5.** இல்லக விளக்கது இருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே.

**திருச்சிற்றம்பலம்**

**பொழிப்புரை :**

ஒரு மனையின் உள்ளே ஏற்றப்படும் தீபம் இருளை நீக்கும் தன்மை உள்ளது. மொழியின் உள்ளே காணப்படும் சிந்தனைத்தீபம் கருத்தொளியைப் பரப்ப, பலவீடுகளிலும் ஏற்றப்படும் தூலதீபங்கள் சூழலில் பரவலாகச் செறிந்துள்ள இருளை நீக்கிப் பலருக்கும் ஒளிவிளக்கம் தரும் சிறப்பினை உடையன. இவ்வகையில் நல்லோரின் உள்ளத்தில் ஒளிவீசும் ஞானதீபமாய் விளங்குவது "**நமசிவாய**" என்னும் ஐந்தெழுத்து மந்திரம் ஆகும்.

**தலம் :** திருவையாற்றுத் திருத்தாண்டகம்

**திருச்சிற்றம்பலம்**

**6.** ஓசை யொளியெலா மானாய் நீயே
உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலா மானாய் நீயே
மலையான் மருமகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடியென்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலா மானாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதி

**திருச்சிற்றம்பலம்**

**பொழிப்புரை :**

திருவையாறு என்னும் திருத்தலத்தினை விட்டகலாத செம்பொன் போலச் சுடரும் சோதியே, ஓசையும் அதிலிருந்து பிறக்கும் எல்லா ஒலிகளுமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளாய் நீயே ; உலகிற்கு ஒப்பற்ற தலைவனாய் உள்ளாய் நீயே; மணங் கமழும் எல்லா மலர்களையும் உள்ளாய் நீயே; மலையரசனுக்கு மருமகனாய் வந்தாய் நீயே; புகழ் பேசுவதற்கு மிகவும் இனியவனாய் உள்ளாய் நீயே; என் குருநாதனாய் என் தலைமேல் திருவடி வைத்து அருள் செய்தாய் நீயே; உலகை விளக்கும் சூரியன், சந்திரன், அக்கினி என்னும் முச்சுடராய் உள்ளவனும் நீயே (சிவபெருமான்) என்பதாம்.

**ஓசை** – ஆகாயம் பிறப்பதற்கு மூலமான சப்த தன் மாத்திரை ;

**ஒலி** – ஆகாயத்தில் இருந்து தோன்றும் பல்வகையான சொல்.

**தலம் :** திருமறைக்காடு.

**திருச்சிற்றம்பலம்**

7. தூண்டு சுடரனைய சோதி கண்டாய்
தொல்லமரர் சூளா மணிதான் கண்டாய்
காண்டற் கரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க் காற்ற எளியான் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய் விரத மெல்லாம்
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே

**திருச்சிற்றம்பலம்.**

**பொழிப்புரை :**

தூண்டப்பட்ட விளக்குப் போன்ற சோதி வடிவமான ஒளி உருவ முடையவன் சிவபெருமான் ஆவார். அவன் தேவர்கள் தலையிற் சூடும் மணி போன்றவன். எளிதிற் காணமுடியாத கடவுள் அவன். அவனை வணங்கு பவர்களுக்கு அவன் மிக எளிதிலே காணத் தோற்றமளிப்பவன். அடியார்களின் தேவைகளை நிறைவேற்றுபவன். அவன் மெய்ச் சைவ சமயமானவன். பல விரதங்களால் மாட்சிமை பெற்ற அடியார்களின் மனத்தில் உறைந்திருப்பவன். அவனே திருமறைக் காட்டிலே வீற்றிருக்கின்ற சிவபெருமான் ஆவான். (இங்கே சிவபெருமான் தன் அடியார்களுக்கு அருள் புரிகின்ற பல்வேறு செயல்களை அப்பர் எங்களுக்குத் தொகுத்துக் கூறியுள்ளார்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்.

8. அரியானை அந்தணர்தம் சிந்தை யானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள்தங் கோனை மற்றைக்
கரியானை நான் முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும் பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

திருச்சிற்றம்பலம்.

**பொழிப்புரை :**

அறிதற்கரியவரும், அன்பருள்ளத்தில் உள்ளவரும் வேதத்தின் உட் பொருளாய் உள்ளவரும் அணுவிற் சிறியரும், எல்லாருக்கும் தெரியாத தத்துவ வார்த்தனை, தத்துவங்களைக் கடந்து வரும், தேனினும் பாலிலும் பார்க்க இனியவரும், ஒளிமயமானவரும், தேவதேவரும், மற்றும் அரியும் அயனுமா யுள்ளவரும் தீயும் காற்றும், கடலும், மலையும், ஆகியவற்றைக் கடந்து நிற்கும் பெரியோனும், பெரும்பற்றப் புலியூரரும் ஆகிய நடராஜப் பெருமானைப் போற்றாமல் நெடுநாளை யான் வீணாக்கிவிட்டேன்.

திருச்சிற்றம்பலம்

9. சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவார் அவர் செல்வம் மதிப்போ மல்லோம்
மா தேவர்க் கேகாந்தர் அல்லாராகில்
அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவு ளாரோ.

திருச்சிற்றம்பலம்.

**பொழிப்புரை :**

மகாதேவரான சிவன்மீது இடையறாது அன்பு செலுத்தாது பிறவழிகளில் மனதைச் செலுத்துபவர்கள் சங்கம், தாமரை என்னும் இரு பேரளவுச் செல்வங் களையும் தந்து மண்ணுலகையும் விண்ணுலகையும் ஆளும் உரிமையைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தாலும் பெருமை குறையும் அவர்களின் செல்வத்தை நாம் மதிக்க மாட்டோம். ஆனால், உறுப்புக்கள் எல்லாம் குறைந்து அழுகும் குட்ட நோயாளிகளாய், பசுவின் தோலை உரித்து அதன் மாமிசத்தை உண்டு அலையும் இழிகுல மக்களேனாலும் அவர்கள் சங்கையைத் தமது சடையில் மறைத்து அணித்து வைத்துள்ள சிவபெருமானின் பத்தி செலுத்தும் அன்பர்களானால் அவர்களே நாம் வணங்கும் கடவுளாவர் என்பதாம்.

(சங்கம், தாமரை எனும் இரு பேரளவுச் செல்வங்களையும் குபேரன் பெற்றிருந்தான்.)

**தலம் : திருவாவடுதுறை** திருத்தாண்டகம்

**திருச்சிற்றம்பலம்**

**10.** திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர் நற் சோதிமிக்க
உருவேயென் னுறவேயென் ஊனே ஊனின்
உள்ளமே உள்ளத்தி னுள்ளே நின்ற
கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்
ஆவடுதண் டுறையும் அமர ரேறே

**திருச்சிற்றம்பலம்**

## பொழிப்புரை:


நல்லவை (நல்லூழ்) காரணமாக உலக இன்பங்கள் யாவற்றையும் செல்வம் மிக்கு தருபவனே; தித்திக்கும் பொருளான தேன் போன்றவனே; தேவர்களுக்கெல்லாம் செழுமைமிக்க ஒளி தரும் விளக்குப் போன்றவனே; செழுமையான சுடரைவிட மிக்க ஒளிபொருந்திய உருவுடையவனே, சொந்த உறவுடையவனே. என் உடலாக இருப்பவனே; உடலினுள்ளேயுள்ளவனே. என் சித்தத்தின் உள்ளே நின்று உணர்வைத் தோற்றுவித்து நின்ற வித்துப் போன்றவனே; தேவ உலக விருட்சம் போன்றவனே, கண் போன்றவனே, கண்ணின் பார்வைக்கு ஆதாரமாக உள்ள கருமணி போன்றவனே; அக்கண் மணியினுள்ளே இருக்கும் ஓர் மணி உருவம் போன்றவனே,

உருவாய் உடலிலே அருவாய் (மறைந்து) நின்று வருத்தும் கொடிய வினையின் பயனாகிய வருத்தம் என்னை ஆட்கொண்டு பீடிக்காவண்ணம் திருவாவடுதுறை என்னும் கோயிலில் தேவர்தம் கடவுளாகிய இறைவனே என்னைக் காப்பாற்றுவாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்



சுந்தரமூர்த்தி நாயனார் பிறந்த இடம் திருமுனைப்பாடி, திருநாவலூர் ஆகும். இவரது தந்தையார் பெயர் சடையனார். தாயார் பெயர் இசைஞானியார். இவரின் இளமைப்பெயர் நம்பியாரூரர் ஆவர். நம்பியாரூரர் அந்நாட்டு அரசனின் சுவிகாரப் புத்திரனாக வளர்ந்து வந்தார். அவர் திருமணப் பருவத்தை எய்திய போது அவருக்குத் திருமணம் செய்ய ஒழுங்குகள் நடைபெற்றன. திருமண நாளன்று சிவபெருமான் கிழப் பிராமண வடிவில் திருமண மண்டபத்துக்கு வந்து எனக்கும் உனக்கும் ஓர் வழக்கு உண்டு. அதனை முடித்த பின்பே திருமணம் செய்ய வேண்டும் எனத் தடுத்தார். அப்பொழுது எனக்கும் உனக்கும் எவ் வழக்கும் இல்லை என்று நம்பியாரூரர், கிழப்பிராமணரைப் **'பித்தன்'** என்று ஏசினார். ஆனால் கிழப்பிராமணர் நம்பியாரூரரைத் தன் அடிமை என்றார். கிழப்பிராமணர் தான் இருக்கும் இடத்தைக் காட்டுவதற்காக திருவெண்ணெய் நல்லூர் கோயிலுக்குள் சென்றார். அங்கே கிழப்பிராமணர் மறைந்தார். அவர் சிவபெருமானாக ஆகாயத்தில் காட்சி கொடுத்தார். **'என்னை நீ பித்தன் என ஏசினாய்'** எனவே பித்தா என்று பாடு எனச் சிவபெருமான் திருவாய் மலர்ந்தார். நம்பியாரூரர் **'பித்தா பிறை சூடி.....'**. என்ற தேவாரத்தை முதன் முதலாகப் பாடினார். இவர் முத்தியடைந்த தினம் **ஆடிமாதச் சுவாதி** ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தலம் :** திருவெண்ணெய் நல்லூர் **பண்:** இந்தளம்

**திருச்சிற்றம்பலம்.**

**1.** பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதே நினைக் கின்றேன் மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூர ருட்டுறையுள்
அத்தாவுனக் காளாயினி யல்லேனென லாமே

**திருச்சிற்றம்பலம்.**

## பொழிப்புரை:

பித்தனே, மூன்றாம் பிறைச் சந்திரனைத் தலையிலே சூடியவனே. பெண்ணை ஆற்றின் தென்கரையிலுள்ள திருவெண்ணெய் நல்லூரில் திருவருட்டுறை என்னும் கோயிலில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே. நீ எப்பொழுதும் என் நெஞ்சினுள் நிறைந்திருக்கின்றாய். எனவே உன்னை எவ்வகையிலும் மறவாமல் நினைக்கின்றேன். எனினும் நான் முற்பிறப்பில் உனக்கு அடிமையாகி இப்பொழுது உனக்கு அடிமையில்லை என வழக்குப் பேசியது தகுமோ? என்பதாம்.

**கோயில் :** திருக்கேதீச்சரம் **பண் :** நட்டபாடை

**திருச்சிற்றம்பலம்.**

**2.** மூவரென இருவரென முக்கணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழில் மாதோட்ட நன் னகரில்
பாவம் வினை யறுப்பார் பயில் பாலாவியின் கரைமேல்
தேவனெனை யாள்வான் திருக் கேதீச்சரத்தானே.

**திருச்சிற்றம்பலம்.**

## பொழிப்புரை :

பிரமா, விஷ்ணு, உருத்திரன் என்னும் மூவராகவும், சிவம், சக்தி என்னும் இருவராகவும் கருதப்படும் முக்கண்ணுடைய பெருமான், மாங்கனிகள் தொங்கும் சோலைகள் நிறைந்த மாதோட்டம் என்னும் நகரிலே தம் பாவங்களையும் தீவினைகளையும் அறுப்பவர்களாகிய அடியவர் பலமுறை கூடும் பாலாவி எனும் ஆற்றங்கரையின்மீது 'தேவன் அடியேனை ஆளுபவன்' என்று போற்றுமாறு திருக்கேதீச்சரம் என்னும் தலத்தில் வீற்றிருக்கின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலம் : திருக்கேதீச்சரம் பண் : நட்டபாடை

திருச்சிற்றம்பலம்.

3. அங்கத்துறு நோய்கள்ளடி யார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பங்கஞ் செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம் பொழில் சூழ்ந்த திருக் கேதீச்சரத் தானே.

திருச்சிற்றம்பலம்.

## பொழிப்புரை :

வியாபாரஞ் செய்ய வந்த மரக்கலங்கள் நிறைந்த கடற்கரையில் அமைந்துள்ள மாதோட்டம் என்னும் நல்ல நகரில் பாலாவித் தீர்த்தக் கரையிலே திருக்கேதீச்சரக் கோயில் இருக்கின்றது. அதனைச் சூழ்ந்து தென்னஞ் சோலைகள் உள்ளன. தம் உடம்பில் இடப்பாகத்தைத் தமதாகப் பெற்றுக் கொண்டவரான கௌரி அம்பாளுடன் திருக்கேதீச்சர நாதர் அக்கோயிலில் எழுந்தருளியிருக்கின்றார். அவர் தம் அடியார்களின் அகத்தும், புறத்தும் உள்ள நோய்களைத் தீர்த்து அருள் புரிகின்றார்.

கோயில்: திருக்கோளிலி பண்: நாட்டராகம்

திருச்சிற்றம்பலம்.

4. நீள நினைந்தடியேன் உமை நித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடவாள் அவள் வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டை யூர்ச்சிலை நெல்லுப் பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவை அட்டித் தரப்பணியே.

திருச்சிற்றம்பலம்.

## பொழிப்புரை :

திருக்கோளிலி என்னும் திருக்கோயிலில் வீற்றிருக்கும் எம்பெருமானே, உன்னை அடியேன் என்றும் மறவாத சிந்தையுடையவனாய், எப்பொழுதுங் கை தொழுது வணங்கி வருகின்றேன். இப்பொழுது, வாள் போன்ற கூரிய கண்களையுடைய என் மனைவி பரவையாரின், விருந்தோம்பற் பணித் தேவைக்கு நெல் இல்லை. பசியால் அவர்கள் வாடி வருந்தாமல் இருப்பதற்காக எனக்கு குண்டையூரில் நெல் கிடைத்தது. அதனைத் திருவாரூருக்கு எடுத்துச் செல்ல ஆள் இல்லை. அதனை அங்கு கொண்டு வந்து தர நீ அருள் செய்வாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தலம்:** திருவாரூர் **பண்:** கொல்லிக்கௌவாணம்

**திருச்சிற்றம்பலம்.**

5. தில்லைவா ழந்தணர்தம் மடியார்க்கு மடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே யென்னாத இயற்பகைக்கு மடியேன்
இளையான்றன் குடிமாற னடியார்க்கு மடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில் சூழ் குன்றையார் விறன் மிண்டற்
கடியேன்
அல்லிமென் முல்லையந்தா ரமர்நீதிக் கடியேன்
ஆரூரனாரூரி லம்மானுக் காளே

**திருச்சிற்றம்பலம்.**

## பொழிப்புரை :

தில்லை நடராசப் பெருமானின் அடியார்களாகிய தில்லைவாழ் அந்தணர்களுக்கு அடியேனாவேன். திருநீலகண்ட நாயனாருக்கு அடியேன். சிவனடியாருக்கு எதனையும் இல்லை என்று கூறாத இயற்பகை நாயனாருக்கும் அடியேன். விருந்தோம்பலிலும், இறை பக்தியிலும் சிறப்பிடம் பெற்ற இளையான் குடிமாறன் நாயனாருக்கும் அடியேன். வெற்றி பெறுவதில் மிக வல்லவரான மெய்ப்பொருள் நாயனாருக்கு அடியேன். பெருஞ்சோலைகள் சூழ்ந்த திருச்செங்குன்றூரவரான விறன் மிண்ட நாயனாருக்கும் அடியேன். அல்லிப்பூவும் மென்மையான முல்லைப்பூவும் கலந்து கட்டிய மாலையை அணிந்துள்ள அமர்நீதி நாயனாருக்கும் அடியேன். அத்தகைய ஆரூரனாகிய அடியேன் திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் என் தந்தையாகிய சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்டவனாவேன்.

**கோயில்:** திருப்பாண்டிக்கொடுமுடி **பண்-** பழம்பஞ்சரம்

**திருச்சிற்றம்பலம்.**

6. மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்
பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும் பிறந் தேன்இ னிப்பிற
வாத தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர் தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாஉனை நான்ம றக்கினுஞ்
சொல்லுநா நமச்சி வாயவே

**திருச்சிற்றம்பலம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொழிப்புரை :**

கற்றவர்கள் தொழுது போற்றுகின்ற சிறப்புக்களையுடையது கறையூர். அங்கு உள்ள 'திருப்பாண்டிக் கொடுமுடி' என்னும் கோமிலில் எழுந்தருளியிருக்கின்ற நல்ல தவவடிவினனே! எனக்கு இவ்வுலகத்திலே வேறு பற்று இல்லாமல் உனது திருவடியையே பற்றாக மனத்திற் கொண்டேன். இப் பேற்றை இப் பிறவியிற் பெற்ற யான் மீண்டும் இறந்து பிறவாத நிலையை எய்தப் பெற்றேன். சிலவேளை அடியேனாகிய நான் உன்னை மறந்தாலும் என்னுடைய நாவானது உனது திருநாமமாகிய '**நமசிவாய**' என்ற பஞ்சாட்சர மந்திரத்தை இடைவிடாது சொல்லும்.

(நற்றவா — நல்ல தவ வடிவம் உடையவனே, உருத்திரனது திருவடிவம்)

**பண்:** சீகாமரம்

**திருச்சிற்றம்பலம்.**

**7.** பிழையுளன பொறுத்திடுவர் என்றடியேன் பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதே படலமென்கண் மறைப்பித்தாய்
குழை விரவு படிகாதா கோயிலுளா யேயென்ன
உமையுடையான் உள்ளிருந்து உளோம்போகீர் என்றானே.

**திருச்சிற்றம்பலம்.**

**பொழிப்புரை :**

அடியாரின் பிழைகளை இறைவன் பொறுப்பாரென்று எண்ணி அடியேன் அறியாமற் பிழை செய்தபோது, பழியைப் பாராமல் என் பார்வையைக் கண் படலத்தால் மறைத்துவிட்டாய். குண்டலம் அணிந்த நீண்ட காதுகளை உடையவனே 'நீ கோயிலில் இருக்கிறாயா?' என்று நான் கேட்க, மாளை வைத்திருக்கும் சிவபெருமான் உள்ளே இருந்து கொண்டு, 'நாம் இருக்கின்றோம்' நீ போவாயாக என்று சொல்லிவிட்டானே.

**பண்:** தக்கேசி

**திருச்சிற்றம்பலம்.**

**8.** ஆலந் தானுகந் தமுது செய்தானை
ஆதியை அமரர்தொழு தேத்தும்
சீலத் தான்பெரி தும் உடையானைச்
சிந்திப் பாரவர் சிந்தை யுளானை
ஏலவார்குழ லாளுமை தங்கை
என் று மேத்தி வழிபடப்பெற்ற
கால காலனைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன் பெற்ற வாறே

**திருச்சிற்றம்பலம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொழிப்புரை :**

திருப்பாற் கடலிலிருந்து தோன்றிய நஞ்சினை விரும்பி உண்டவனும், யாவற்றிற்கும் தொடக்கமானவனும், தேவர்கள் வணங்கித் துதிக்கும் ஒழுக்கம் மிக உடையவனும், தன்னைத் தியானிப்பவரின் மனத்தில் வீற்றிருப்பனும், ஏலச்சாந்து பூசப் பெற்ற கூந்தலையுடைய உமையெனும் பெண்ணிற் சிறந்தவளால் எப்போதும் துதித்து வழிபடப் பெற்ற, யமசங்காரனும் ஏகாம்பரநாதனும் ஆகிய எமது தலைவனுமாகிய சிவபிரானைக் காணும் பாக்கியம் பெற்ற கண்ணை அடியேன் பெற்றடைந்த விதம் வியக்கத்தக்கதே.

**கோயில்:** திருவாரூர் **பண்:** செந்துருத்தி

**திருச்சிற்றம்பலம்**

**9.** **மீளா அடிமை உமக்கே ஆளாய்ப்**
**பிறரை வேண்டாதே**
**மூளாய்த் தீப்போல் உள்ளே கனன்று**
**முகத்தால் மிகவாடி**
**ஆளாய் இருக்கும் அடியார் தங்கள்**
**அல்லல் சொன்னக்கால்**
**வாளாங் கிருப்பீர் திருவாரூரில்**
**வாழ்ந்து போதீரே**

**திருச்சிற்றம்பலம்**

**பொழிப்புரை:**

திருவாரூர்ப் பொருமானே, விலக முடியாதவாறு என்றென்றும் உமக்கே அடிமையாக உள்ளவர்கள் பிறரிடம் எதுவும் கேட்கமாட்டார்கள். அவர்கள் தமக்குத் துன்பம் வரும்பொழுது வெளியே மூண்டு சுடர்விட்டு எரிகின்ற நெருப்புப் போலன்றி உள்ளே எரிகின்ற நெருப்புப்போல மனம் வருந்தி முகம் வாடி நிற்பார்கள்.

அத்தகைய அடியார்கள் தம் துன்பங்களை உம்மிடம் கூறும் பொழுது நீர் ஒன்றும் கூறாமல் இருப்பீர். இதுவே உம்முடைய இயல்பாயின் நீர் நன்கு வாழ்ந்துபோம். (என்று மனக்கசப்போடு சுந்தரர் குறையிருந்தார். அவ்வேளையில் அவருக்கு வலக்கண் கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தலம்:** திருக்கடவூர்

**திருச்சிற்றம்பலம்.**

10. மருவார் கொன்றை மதி சூடி
மாணிக்கத்தின் மலைபோல
வருவார் விடைமேல் மாதோடு
மகிழ்ந்து பூதப்படை சூழத்
திருமால் பிரமன் இந்திரர்க்கும்
தேவர் நாகர் தானவர்க்கும்
பெருமான் கடவூர் மயானத்துப்
பெரிய பெருமான் அடிகளே

**திருச்சிற்றம்பலம்.**

**பொழிப்புரை :**

வாசனை பொருந்திய கொன்றை மாலையை அணிந்துள்ளவரும், மூன்றாம் இளம் பிறைச் சந்திரனைச் சூடியுள்ளவருமான சிவபெருமான் பெறுமதி மிக்க ஒளிபொருந்திய செல்வமான மாணிக்கம் குவிந்திருப்பது போன்று இடப வாகனத்தின்மீது இடப்பாகத்தில் உமாதேவியாரைப் பாகமாகக் கொண்டு வருவீர். அப்போது இதனைக் கண்டு பக்தி இன்பத்தால் பூதகணங்கள் சூழ வலம் வருகின்றன. படைத்தற்கடவுள் பிரமன், காத்தற் கடவுள் திருமால், இந்திரலோகத் தேவர்களின் தலைவன் இந்திரன், தேவர்கள், நாகர்கள் என்போர் அனைவரும் போற்றி வணங்கும் இறைவன், திருக்கடவூர் என்னும் திருப்பதியிலே உறைந்துள்ளவரும், சுடலையில் நின்று நடனமாடுபவருமான பெரியபெருமான் என அடியவர்களால் வணங்கப்படும் சிவபெருமானே அவர் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. மாணிக்கவாசக சுவாமிகள் - திருவாசகம்



இவர் பாண்டிநாட்டிலே திருவாதவூரிற் பிறந்தார். இவர் தந்தையார் பெயர் சம்புதாச சிவாசாரியார். தாயார் பெயர் சிவஞானவதியார். இவரது இளமைப் பெயர் திருவாதவூரர். இவர் பிராமண பரம்பரையைச். சேர்ந்தவர். இவர் அமைச்சராக இருந்த பொழுதும் அவரது சித்தம் சிவன்பால் இருந்தது. உலக வாழ்வில் அவருக்கு ஈடுபாடு இருக்கவில்லை. பாண்டிய மன்னனுக்குக் குதிரை வாங்குவதற்குச் சென்ற திருவாதவூரர் திருப்பெருந்துறையில் குருந்தமர நிழலில் வீற்றிருந்த ஞானகுரு ஒருவரைச் சந்தித்தார். அவரிடம் இருந்து சிவஞானம் பற்றிய அறிவைப் பெற்றார். குதிரை வாங்கவந்த பணியை மறந்தார். துறவுக் கோலம் பூண்டார். தம் உடல், பொருள், ஆவி, அனைத்தையும் அருட்குருவிடம் ஒப்படைத்தார். பின்னர் மாரி மழை பொழிந்ததுபோல் அருட்பாடல்களை அருளினார். அப்பாடல்கள் பொருள் பொதிந்தன. மணி மணியான சொற்கள் கொண்டவை எனவே அருட்குரவர் அவருக்கு மணிவாகசர் எனப் பட்டம் சூட்டினார்.

பாண்டிய மன்னனின் கட்டளையை நிறைவேற்றாத குற்றத்திற்காக அரசனின் தண்டனைகளைப் பெற்றார். அப்போது சிவபெருமான் பல அற் புதங்களைச் செய்து அவரைக் காப்பாற்றினார். இவர் திருவாசகமும், திருக்கோவையாரும் பாடினார். திருவாசகம் தெய்வத்தன்மையுடைய மொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பொருள்படும். இவர் முதன் முதலில் பாடிய திருவாசகம் " **நமச்சிவாய வாழ்க** " என்பதாகும். இவர் முத்தியடைந்த தினம் **ஆனிமகம்** ஆகும்.

**தலம் :** தில்லை

**திருச்சிற்றம்பலம்.**

1. பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடீ!
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ

**திருச்சிற்றம்பலம்.**

## பொழிப்புரை :

சிவபெருமான் பூசுவது வெண்ணிறமான திருநீறு. அவருடைய ஆபரணம் சீறுகின்ற பாம்பு. அவர் தம் வாயினாற் கூறுவது வேதம். கடவுள் என்பவர் இவ்வாறு வேடம் கொள்வது பொருந்துமா? என்று தோழி ஒருத்தி மற்றையவளைக் கேட்கின்றாள். அப்பொழுது அவ்வேடம் பொருந்தும், எவ்வாறெனில் தலைவனாகிய சிவபெருமான் தானே இயற்கையாகவும், அதில் உள்ள உயிர்களாகவும் விளங்குகின்றான். அவன் உயிர்கள் எல்லாவற்றிற்கும் அவ்வவற்றிற்கு ஏற்ற பயன் அளிக்கும் இயல்புடையவன் என்று சாழல் கொட்டி விளையாடுவோம் என மற்றவள் விடை கூறுகிறாள்.
**(திருவாசகத்தில் ஒரு பகுதியே திருச்சாழல் ஆகும். சாழல் என்பது பெண் பிள்ளைகளின் ஒரு வகை விளையாட்டு)**

**திருச்சிற்றம்பலம்.**

2. வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே.

**திருச்சிற்றம்பலம்.**

## பொழிப்புரை :

ஆகாயம், பூமி, காற்று, நெருப்பு என்னும் பூதங்கள் ஆகியும் உடல், உயிர், மெய்ப்பொருள், பொய்ப்பொருள் என்பன ஆகியும் யாவற்றிற்கும் தலைவனாகியும், 'நான்' என்னும் செருக்கும் 'எனது' என்னும் செருக்கும் உள்ளவரை ஆட்டுவிக்கும் திருக்கூத்துடையவனாகியும் நின்ற, இறைவனாகிய உன்னை என்ன சொல்லி வாழ்த்துவனோ? (தெரியவில்லையே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்.

3. காட்டகத்து வேடன் கடலில் வலைவாணன்
நாட்டிற் பரிப்பாகன் நம் வினையை – வீட்டி
அருளும் பெருந்துறையான் அங்கமல பாதம்
மருளுங் கெட நெஞ்சே வாழ்த்து.

திருச்சிற்றம்பலம்.

**பொழிப்புரை :**

காட்டில் வேடனாகவும், கடலில் வலைஞனாகவும், பாண்டி நாட்டில் குதிரைப் பாகனாகவும் வந்தருளிய திருப்பெருந்துறை ஈசன் எங்கள் வினைகளை அழித்துத் தனது அழகிய தாமரை போன்ற மலரடிகளை அருளுவான். எனவே மனமே, மயக்கம் கெட இறைவனை வாழ்த்துவாயாக.

**பிடித்தபத்து**

திருச்சிற்றம்பலம்.

4. பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

திருச்சிற்றம்பலம்.

**பொழிப்புரை :**

தன் குழந்தையின் பசி வேளையினை அறிந்து பால் ஊட்டுகின்ற தாயினைப் பார்க்கினும் மிகவும் என்மீது இரங்கி, தீவினையேனுடைய உடற் பற்று நீங்குமாறு அதனை உருகுவித்து, உள்ளத்தின் கண்ணே அறிவாகிய ஒளியை வளர்த்து, என்றும் குறைதல் இல்லாத பேரின்பமாகிய தேனினைப் பொழிந்து எல்லா இடந்தோறும் என்னுடன் உலவிய செல்வப் பரம்பொருளே, சிவபெருமானே யான் உன்னை விடாது இறுகப் பற்றிக் கொண்டேன்....... ஆதலினால் நீ இனி என்னை விட்டு எங்கு எழுந்தருளிச் செல்வது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்.

5. பாரொடு விண்ணாய்ப் பரந்த எம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

திருச்சிற்றம்பலம்.

**பொழிப்புரை :**

பார் முதல் விண்வரை ஐம்பூதமாக் விரிந்தவரே எம்பிரானே, உன்னை யன்றி வேறு பற்றுக் கோடில்லை. சீருள்ளவனே, சிவலோகனே, திருப்பெருந் துறைச் சிவனே, என்குறைக்கு நான் யாரை நோவேன் 'இதை யாரிடம் முறையிடுவேன்' என்னை ஆட்கொண்ட நீயே அருள வேண்டும். நீ அருளாது விட்டால், இவ்வுலகில் வாழும் வகையறியேன் ஆதலால் அருள் கூர்ந்து 'வா' என்று அழைப்பாயாக.

**திருச்சதகம்:** மெய்யுணர்தல் **தலம்:** திருப்பெருந்துறை.

திருச்சிற்றம்பலம்.

6. மெய்தான் அரும்பி விதர்விதித் து
உன்விரை யார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர் துன்னைப் போற்றி
சயசய போற்றியென்னுங்
கைதான் நெகிழ விடேனுடை
யாயென்னைக் கண்டுகொள்ளே

திருச்சிற்றம்பலம்.

**பொழிப்புரை :**

உடையவனே, உடல், உள்ளம், உரை என்னும் மூன்றும் நீர்த்துளி அரும்பல், கை கூப்பல், கண்ணீர்மல்கல், உள்ளம் குழுறல், 'போற்றி சயசய போற்றி' என்று துதித்தல் ஆகிய பக்தித் துலங்கல்களை வெளிப்படுத்த நான் உன்னைப் பற்றிக் கொண்டேன். என்னை இனங்கண்டு அருள் புரிவாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்.

7. கடையவ னேனைக் கருணையி
னாற்கலந் தாண்டு கொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண்
டாய்விறல் வேங்கையின்றோல்
உடையவ னேமன்னு முத்தர
கோசமங் கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேனெம்பி
ரானென்னைத் தாங்கிக் கொள்ளே.

திருச்சிற்றம்பலம்.

**பொழிப்புரை :**

முன்பு கருவாய் வந்து என்னை ஆட்கொண்ட ஈசனே இப்பொழுது என்னைப் புறக்கணிப்பீரா? இல்லை அல்லவா! ஆடையழகு வாய்ந்த உத்தர கோசமங்கை வேந்தே, சடாமுடியைத் தரித்தவனே, உலகவாழ்வில் விரக்தி உற்ற என்னை வீழ்ச்சியிலிருந்து காக்க ஊன்றுகோல் போல் நீர் தாங்குவீராக.

**திருக்கோத்தும்பி**

திருச்சிற்றம்பலம்.

8. தோலுந் துகிலுங் குழையுஞ் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமுந் தொக்க வளையு முடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூ தாய் கோத்தும்பி.

திருச்சிற்றம்பலம்.

**பொழிப்புரை :**

வலப்பக்கத்திலே புலித்தோலும், குண்டலமும், பால் போன்ற வெள்ளை நிறத் திருநீறும், சூலப்படையும் இடப்பக்கத்திலே மெல்லிய ஆடையும், வட்டத் தோடும், பசுஞ்சாந்தும், பசுமையான கிளியும், வளையற்றொகுதியும் உடைய பழைமையான உமையொரு பாகத் திருக்கோலத்தைக் கண்டு அரச வண்டே மெல்லென ரீங்காரம் செய்வாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்.

9. கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையுமாட் கொண்
டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்
கருணைச்
சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பி

திருச்சிற்றம்பலம்.

**பொழிப்புரை :**

அரச வண்டே, கண்ணப்ப நாயனாரின் பேரன்பிற்கு இணையான அன்பு பிறரிடம் இல்லாமையைக் கண்ட பின்னரும் என் தந்தையாகிய இறைவன் என்னையும் அடிமையாகக் கொண்டருளி நற் பண்புள்ளவனாக்கித் (தில்லைக்கு) வாவென்று கூறிய பெருங்கருணையும் அழகிய திருநீற்றுப் பொடியுமுடைய சிவபிரானின் பாத மலர்க்கே போய் ஊதுவாயாக.

**தலம்:** திருப்பெருந்துறை

திருச்சிற்றம்பலம்.

10. அன்றே என்றன் ஆவியும் உடலும்
உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட் கொண்ட
போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ எண்டோள்
முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ
இதற்கு நாயகமே

திருச்சிற்றம்பலம்.

**பொழிப்புரை :**

எம்பெருமானே, அன்று என்னை குருந்தமரநிழலில் ஆட்கொண்ட போது எனது உயிர், உடல், பொருள் எல்லாம் உனது உடமையாகப் பெற்றுக் கொண்டாயல்லவா? மலை போன்ற உயர்பொருளே, இன்று எனக்குத் துன்பம் ஏற்பட்டு விட்டதே. எட்டுத்தோள்களையும், முக்கண்ணையும் கொண்ட பெருமானே. நன்மை செய்வாய், தவறு செய்வாய் இதற்கு நான்தான் வாய்த் துள்ளேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிசைப்பா

திருவிசைப்பா என்பது இறைவனின் பெருமையைப் பாடுகின்ற தெய்வத்தன்மை பொருந்திய இசைப்பாடல் எனப் பொருள்படும். திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர் முதலிய ஒன்பதின்மர் பாடிய பாடல்கள் திருவிசைப்பாவில் அடங்குகியுள்ளன.

**கோயில்:** திருவீழிமிழலை **பண்:** பஞ்சமம்

**திருச்சிற்றம்பலம்.**

**1.** கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ்சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந் தனவே.

**திருச்சிற்றம்பலம்.**

**பொழிப்புரை :**

சிவபெருமான் மெய்ஞ்ஞான நூல்களைக் கற்றவர்கள் விளங்குகின்ற பேரின்பமாகிய கற்பகக் கனி, கருணை புரிவதில் எல்லையில்லாத கடலை ஒத்தவர். மெய்ஞ்ஞான நூல்களைக் கல்லாதவர்கள் அறிந்து கொள்ள முடியாத மாணிக்க மலை போன்றவர். சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்று கொள்பவர்களின் மனத்திலே தூண்டாமணி விளக்குப் போலப் பிரகாசிப்பவர். பகைவர்களாகிய தாரகாக்கன், கமலாக்கன், வித்தியுன்மாலி என்னும் அரக்கர்களின் முப்புரங்களையும் எரித்தவர். திருவீழிமிழலையில் வீற்றிருக்கின்ற, வெற்றியால் மேம்பட்ட நம் தலைவனான சிவபெருமானை அகத்தினில் இடையறாது கண்டு என் மனங்குளிர என் கண்களும் குளிர்ந்தன.

**தலம்:** திருவீழிமிழலை **பண்:** பஞ்சமம்

**திருச்சிற்றம்பலம்.**

**2.** ஏகநா யகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை யெதிரில்
போகநா யகனைப் புயல்வண்ணற் கருளிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
உண்டென வுணர்கிலேன் யானே.

திருச்சிற்றம்பலம்.

**பொழிப்புரை :**

ஒரு பெருந்தெய்வமும், தேவர்களை ஆளும் மகாதேவரும் என்னுயிர் காக்கும் அமுதும், நிகரில்லாத இன்பத்தலைவரும், திருமாலுக்கு அருள் புரிய பொன்னாலாய நெடிய ஊர்தியில் விளங்கிவந்த அந்திமேக வண்ணனும், வளம்மிக்க திருவீழிமிழலை என்னும் தலத்தில் உள்ள விண்ணழி விமானம் என்னும் செழுங்கோயிலில் உறையும் யோக நிலைத் தலைவனும் ஆகிய சிவநாயகரைத் தவிர, வேறொரு உயர் தெய்வம் உள்ளதென நான் ஒருபோதும் உணரவில்லை.

கோயில் பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்.

3. ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

திருச்சிற்றம்பலம்.

**பொழிப்புரை:**

ஒளி மிகுகின்ற விளக்கே, அழிவில்லாத ஒப்பற்ற பொருளே, சுட்டி அறியும் அறிவுக்கு அப்பால் நின்று சிவஞானத்தால் அறிய நின்ற பேரறிவே, ஒளிபொருந்திய பளிங்கின் பேரொளியினை உடைய மாணிக்க மலையே, உள்ளத்தின் கண்ணே நின்று தித்திக்கும் தேனே, அன்பு பெருகும் மனத்தின்கண் பேரானந்தத்தை விளைவிக்கும் கனியே! பொன்னம்பலத்தை ஆனந்த அரங்கமாகக் கொண்டு (ஆதியும் அந்தமுமில்லாத) தெய்வீக நடனத்தைச் செய்யும் உன்னை அடியவனாகிய யான் புகழ்ந்து வியந்து உரைக்குமாறு உரைத்தருள்வாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்.

4. நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன் செய் அம்பலத்தரசே
ஏறணி கொடியெம் ஈசனே உன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசையே

திருச்சிற்றம்பலம்.

## பொழிப்புரை :

திருநீறு பூசிய செம்பவளமலை போன்றவனே. நிலைபேறுடைய ஒப்பற்ற நெற்றியில் அக்கினியை மூன்றாவது கண்ணாக உடையவனே, வெவ்வேறான பலவகை உலக உயிர்கள் எல்லாம் நுகரும் பொருளே, யோக நிலையில் கடலை ஒத்தவனே, மேருமலையை வில்லாக வளைத்த வீரனே, கங்கையைச் சடையில் அணிந்து கொண்டு அற்புதத் திருநடனம் ஆடுகின்றவனே, அழகிய பொன்னால் வேயப்பட்ட அம்பலத்தை உடைய எம்பெருமானே உன்னை அடியவனானேன் பொருந்துமாறு நீ அடியேனுடன் பொருந்துவாயாக.

பண்: பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்.

5. அன்னமாய் விசும்பு பறந்தயன் தேட
அங்ஙனே பெரிய நீ சிறிய
என்னையாள் விரும்பி என்மனம் புகுந்த
எளிமையை என்று(ம்) நான் மறக் கேன்
முன்னம்மா லறியா ஒருவனாய் இருவா
முக்கணா நாற் பெருந் தடந்தோள்
கன்னலே தேனே அமுதமே கங்கை
கொண்டசோ ளேச்சரத்தானே.

திருச்சிற்றம்பலம்.

## பொழிப்புரை :

திருமால் முன்னம் (பன்றியாக வடிவெடுத்து) தேடியும் காணாத ஒருவனாகிய ஒப்பற்ற சிவசக்தி வடிவினனே, மூன்று கண்களை உடையவனே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு பெரிய அகன்ற தோள்களை உடையவனும், கரும்பு, தேன், அமிர்தம் போன்றவனுமாகிய இறைவனே, கங்கை கொண்ட சோளேச்சரத்து ஈசனே!

பிரமா அன்னப் பறவையாய் ஆகாயத்திற் பறந்து தேடவும், காட்சியளிக்காத பெருமையுள்ள நீ, என்னை ஆட்கொள்ள விரும்பி எனது உள்ளத்திற் புகுந்தருளிய எளிமைப் பண்பை, நான் ஒருபோதும் மறக்கமாட்டேன்.

## திருப்பல்லாண்டு

திருப்பல்லாண்டு என்பது பல்லாண்டுகள் வாழ்வாயாக என்று ஆதியும் அந்தமும் இல்லாத இறைவனைச் சிவனடியார்கள் வாழ்த்திப் பாடுகின்ற திருப் பாடல்களாகும். அது பதின்மூன்று பாடல்களைக் கொண்ட பதிகமாக அமைந் துள்ளது. முன்னொருநாளில் தில்லையில் திருவாதிரைத் திருவிழா அன்று சிவபெருமானின் தேர் அதன் நிலையை விட்டு அசையவில்லை. அப்போது இறைவன் அசரீரிப்படி சேந்தனார் '**மன்னுக தில்லை வளர்க நம் பக்தர்கள்**' என்ற திருப்பல்லாண்டு பாடித் தேரை அசைய வைத்தார் என்பது வரலாறு.

**கோயில் :** **பண்:** பஞ்சமம்

**திருச்சிற்றம்பலம்.**

1. மன்னுகதில்லை வளர்க நம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாளுமை கோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த
பித்தர்க்குப் பல்லாண்டு கூறுதுமே.

**திருச்சிற்றம்பலம்.**

**பொழிப்புரை :**

தில்லை நிகர் நிலைபெறுக. நம் அடியார்கள் பெருகுக; வஞ்சகர்கள் நீங்கியொழிக; பொன்னினாற் வேயப்பட்ட மண்டபத்துள்ளே புகுந்து உலகம் முழுவதும் விளங்க அன்னநடை போன்ற நடையுடைய மாதாகிய உமாதேவியார் நாயகனாகிய சிவபெருமானின் அடியவர்களாகிய எமக்கு அருள் செய்து இனிமேல் வரக்கூடிய பிறப்பை அறுக்கும் பொருட்டு, முத்தி நெறியைத் தந்த (பித்தனாகிய) சிவபெருமானுக்குப் பல்லாண்டு சொல்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்.

2. சீருந்திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத வறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவா ருலகில்
ஊரு முலகுங் கழற வுழறி
யுமைமண வாள னுக்காட்
பாரும் விசும்பு மறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே
திருச்சிற்றம்பலம்.

**பொழிப்புரை:**

சிவலோக நாயகன் திருவடிக்குக் கீழிருந்து, மற்றொருவரும் பெறாத சிவஞானப் பெருமையும், முத்திச் செல்வமும் பெருகும் வண்ணம் பெற்று விட்டேன். நான் பெற்ற இப்பேறினை இவ்வுலகில் வேறு யார்தான் பெறுவார்? உமை மணவாளனுக்கு நாம் ஆட்பட்ட தன்மையினை மண்ணுலகும் விண்ணுலகும் அறியும் வண்ணம் பல்லாண்டு பாடுவோம்.

**கோயில்** **பண்:** பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்.

3. பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.
திருச்சிற்றம்பலம்.

**பொழிப்புரை:**

வியாக்கிரபாத முனிவரின் குழந்தை உபமன்யு. அக்குழந்தை பசியினாற் பாலை வேண்டி அழுதது. அக் குழந்தைக்குச் சிவபெருமான் பாற்கடலை அழைத்துப் பருகச் செய்தார். அவர் திருமாலுக்கு சக்கரப்படையைக் கொடுத்தருளினார். வேதங்களை ஓயாது ஒலிக்கின்ற அந்தணர்கள் நிலை பெற்றுள்ள தில்லைப்பதியில் வாழ்கின்றனர். அத்தகைய சிறப்புடைய தில்லையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள சிற்றம்பலம் என்னும் பொற்சபையைத் தமக்கு இடமாகக் கொண்டு அருள்பாலித்து ஆனந்தத் தாண்டவம் ஆட வல்லவன் சிவபெருமானே. அவரைப் புகழ்ந்து பல்லாண்டு வாழ்க என்று கூறி நாம் வாழ்த்துவோம்.

**கோயில்** **பண்:** பஞ்சமம்

**திருச்சிற்றம்பலம்.**

4. மிண்டு மனத்தவர் போமின்கண் மெய்யடி யார்கள்
விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி யீசற்காட்
செய்மின் குழாம் புகுந்து
அண்டங் கடந்த பொருளள வில்லதோர்
ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டு மின்றுமென் றுமுள்ள பொருளன்றே
பல்லாண்டு கூறுதுமே.

**திருச்சிற்றம்பலம்.**

**பொழிப்புரை :**

(எம்பெருமானாகிய சிவபெருமானை வணங்காமல்) முரண்பட்ட மனத்தை உடையவர்கள் (இவ்விடத்தில் நில்லாமல்) அகலுங்கள். எம்பெருமான்மீது மெய்யன்பு பூண்ட அடியார்கள் விரைவாக (இங்கு) வாருங்கள். (நீங்கள் இந்த) அடியார் கூட்டத்தினுள் புகுந்து, (அயரா அன்பு) கொண்டும், (உங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அவருக்குக்) கொடுத்தும் வழிவழியாக அவருக்கு அடிமை பூண்டு தொண்டு செய்யுங்கள். (அவர்) எல்லா அண்டங்களுக்கும் அப்பாற்பட்டபரம் பொருள். (அவர்) எல்லை கடந்த வெள்ளம் போன்று அளவு கடந்த இன்பமயமான பொருள். (அவர்) முக்காலத்திலும், இக்காலத்திலும், எக்காலத்திலும் உள்ள (அதாவது ஆதி அந்தம் இல்லாத) பொருள். என்றிவ்வாறு (நாம் அவனை) வாழ்த்திப் பல்லாண்டு பாடுவோமாக.

**தலம்:** **கோயில்** (சிதம்பரம்) **பண்:** பஞ்சமம்

**திருச்சிற்றம்பலம்.**

5. குழலொலி யாழொலி கூத்தொலி யேத்தொலி
யெங்குங் குழாய் பெருகி
விழவொலி விண்ணள வுஞ்சென்று விம்மி
மிகுதிரு வாரூரின்
மழவிடை யார்க்கு வழிவழி யாளாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணஞ் செய் குடிப்பிறந்த
பழவடி யா ரொடுங் கூடியெம் மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

திருச்சிற்றம்பலம்.

**பொழிப்புரை :**

குழல்களின் ஒலியும், யாழின் ஒலியும், நடனமாடும் கூத்தின் ஒலியும் எல்லா இடங்களிலும் அடியார்கள் கூட்டமாகக் கூடி வாழ்த்தும் வாழ்த்தொலியும், திருவிழா ஒலியுமாகிய ஒலிகள் எல்லாம் சேர்ந்து பேரொலியாகப் பெருகி; வானொலியாக வானளாவச் சென்று மிக்கு ஒலிக்கும் திருவாரூரில் எழுந்தருளியுள்ள இள ஏறூர்ந்த சிவபெருமானுக்கே வழிவழியாகப் பரம்பரை அடிமையாகின்றவர்கள் தமக்குள்ளேயே திருமணஞ் செய்யும் குலத்தில் பிறந்த பழ அடியார்களோடு சேர்ந்து எம் தந்தையாகிய சிவபெருமானுக்கே பல்லாண்டு கூறி வாழ்த்துப் பாடுவோமாக.

## திருப்புராணம்

சைவத் திருமுறைகளுள் பெரியபுராணமும் ஒன்று. அது பக்தி நெறியில் நின்று இறையடியார்களுக்கும் தொண்டு செய்து முத்தியடைந்த அடியார் வரலாற்றைக் கூறும் பாடல்கள் கொண்ட நூலாகும். சேக்கிழார் திருத்தொண்டத் தொகையைப் பாடுவதற்காக எம்பெருமான் "**உலகெலா முணர்ந் தோதற் கரியவன்**......." என அடியெடுத்துக் கொடுக்க அவ் அடியை முதலாகக் கொண்டு சேக்கிழாரால் பெரியபுராணம் பாடப்பட்டது. இது 63 தனியடியார் களையும் 9 தொகையடியார்களையும் பற்றிக் கூறுகின்றது.

திருச்சிற்றம்பலம்.

1. உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவோம்.

திருச்சிற்றம்பலம்.

**பொழிப்புரை :**

உலகத்திலுள்ளாரெல்லாம் இறையுணர்வுற்று ஓதுவதற்கு உரியவனும், மூன்றாம் பிறைச்சந்திரனையும், குளிர்ந்த நீரைப் பெருக்குகின்ற கங்கையையும், சடாமுடியையும் தலையில் சூடியுள்ள தலைவரும், அறிவதற்கரிய சோதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவானவரும் தில்லையம்பலத்திலே நடனமாடுகின்றவருமாகிய சிவபெருமானின் நடனமாடும்போது ஒலிகொண்ட மலர் போன்ற பாதங்களைப் போற்றி வணங்குவோம்.

**திருச்சிற்றம்பலம்.**

2. தண்ணளிவெண் குடைவேந்தன்
செயல்கண்டு தரியாது
மண்ணவர்கள் மழைபொழிந்தார்
வானவர்பூ மழை சொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே
அணிவீதி மழ விடைமேல்
விண்ணவர்கள் தொழநின்றான்
வீதிவிடங்கப் பெருமான்

**திருச்சிற்றம்பலம்.**

## பொழிப்புரை :

மநுநீதிகண்ட சோழனின் அபூர்வ நீதிச் செயலைக் கண்டு (பசுக் கன்றைத் தேர்சில்லில் கொன்றதற்காகத் தனது மகனைத் தேர்க்காலில் இட்டுக் கொன்றது) மக்கள் மனம் பொறாது கண்ணீர் பெருக்கினார்கள். தேவர்கள் மலர்மழை பொழிந்தார்கள். அப்போது சிவபிரான் இடபாரூடராகத் தேவர்கள் வணங்க, மநுநீதி கண்ட சோழனுக்குக் கண்ணின் எதிரிலே அடியார்கள் அணியணியாக நிற்கும் வீதி யிற் காட்சி கொடுத்து, தேவர்கள் எல்லாம் தொழும்படியாக வீதிவிடங்கப் பெருமான் அருள்புரிந்தார்.

**திருச்சிற்றம்பலம்.**

3. ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையின்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்குங்
கானத்தி னெழு பிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்.

**திருச்சிற்றம்பலம்.**

## பொழிப்புரை :

ஞானத்தாலாய (அறிவினாலாய) திருவுருவம் போல்வாரை, நான்கு வேதங்களுக்கு மேலாக ஒப்பில்லாத துணையாவுள்ளாரை விண்ணிலன்றி மண்ணுலகில் வளர்கின்ற இளஞ் சந்திரனை, தேன்விளங்கும் கொன்றைப் பூமாலையை அணிந்த சிவந்த சடையையுடைய சிவபிரானது மிகு புகழைப் பாடும் ஏழிசை யாலாகிய ஒரு பிறப்பு விசேடத்தை கண்கள் கண்டு மகிழ்வெய்தத் (உள்ளம்) தரிசித்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்.

4. ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குறைமொரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடுமா னந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

திருச்சிற்றம்பலம்.

**பொழிப்புரை :**

மெய், வாய், கண், மூக்கு செவி என்னும் ஐந்து பொறிகள் வாயிலாகவும் அறியப்படுகின்ற சுவை, ஒளி, ஊறு, ஓசை, மணம் என்னும் பெரிய அறிவுகள் ஐந்தும் ஒருமைப்பட்டுக் கட்புலன் ஒன்றிலே ஒடுங்கி நிற்க, அளவைக்கு அகப்படாத தொழிற்பாடுகளையுடைய மனம், புத்தி, சித்தம் அகங்காரம் என்னும் அந்தக் கரணங்கள் நான்கும் மனம் என்னும் ஒன்றிலே ஒடுங்கி நிற்க, இராசதம், தாமதம், சாத்துவிதம் என்னும் முக்குணங்களும் அவற்றுள் சிறந்ததான " சாத்துவிகம் என்னும் ஒன்றிலே அடங்கி நிற்க, பிறைச் சந்திரனைச் சூடிய சடையையுடைய சிவபெருமான் அம்பலத்தில் நின்று ஆடுகின்ற எல்லையில்லாத தனிப் பெருஞ்சிறப்புடைய ஆனந்தக் கூத்தைக் கண்டதனால் விளைந்த பேரின்பமாகிய வெள்ளத்திலே மூழ்கி ஒரே தன்மையாகிய மகிழ்ச்சியிலே (சுந்தரர்) உள்ளம் மலரப்பெற்றார்.

திருச்சிற்றம்பலம்.

5. சிவனடியே சிந்திக்கும்
திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும்
பாங்கினிலோங் கியஞான
முவமையிலாக் கலைஞான
முணர்வரிய மெய்ஞ்ஞானந்
தவமுதல்வர் சம்பந்தர்
தாமுணர்ந்தா ரந்நிலையில்

திருச்சிற்றம்பலம்.

**பொழிப்புரை :**

சிவனடியே சிந்திக்கும் ஞானமும், பிறப்பை ஒழிக்கும் ஞானமும் கலை ஞானமும், உணரவும் உரைக்கவும் எட்டாத ஞானமுமாகிய அபரஞானம், பரஞானம் எனும் இருவகை ஞானமும் ஒருங்கே பெற்றார் தவத்தில் முதன்மை பெற்ற சம்பந்தர் பிள்ளையார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப் பாடல்கள்

## திருப்புகழ்

திருப்புகழைப் பாடியவர் அருணகிரிநாதர். இவர் திருவண்ணாமலை என்னும் ஊரில் பிறந்தவர். இவரை இளம் வயதில் கட்டுப்படுத்தி வளர்க்கக் கூடிய யாரும் இல்லாத நிலையில் அவர் தீய வழியிற் சென்றார். இதனால் வறுமையும், பிணியும் அவரை வாட்டியது. இவரை உய்விப்பதற்காகத் திரு வண்ணாமலை முருகன் சற்குரு ஒருவரின் உருவில் வந்து அருணகிரி நாதருக்குக் காட்சியளித்தார். அவருக்குத் திருவடி தீட்சை அளித்தார். திருப்புகழைப் பாடும்படி அருணகிரிநாதரை சற்குரு பணித்தார். ஏடு எழுதா எளியேன் எவ்விதம் பாடு வேன் என்று கூறிய அருணகிரிநாதரின் நாவிலே "ஓம்" என்று எழுதி "முத்து" எனப்பாடு எனச் சற்குரு பணித்தார். அருண கிரிநாதர் "**முத்தைத் தரு பத்தித் திருநகை**" என்று பாடத் தொடங்கினார். அவருடைய பாடல்களுக்குத் "**திருப்புகழ்**" என்னும் பெயரை முருகனே கொடுத்தருளினார்.

**1.** தனந்த தான தனதன தான தனதான
தனந்த தான தனதன தான தனதான
இசைந்த ஏறும் கரியுரி போர்வையும் எழில்நீறும்
இலங்கு நூலும் புரியத ளாடையும் மழுமானும்
அசைந்த தோடுஞ் சிரமணி மாலையும் முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உகந்த பாசங் கயிறொடு தூதுவர் நலியாதே
அசந்த போதென் துயர்கெட மாமயில் வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமானே.

**பொழிப்புரை :**

பொருந்திய இடப வாகனமும், யானைத்தோல் போர்வையும், அழகிய திருநீற்றுப் பூச்சும், தெளிவுடன் விளங்குகின்ற முப்புரி நூலும், புலித்தோல் ஆடையும், கையில் மழுவும் மானும், அசைந்தாடும் முடிமீது அழகிய தலைமாலையும் சூடியிருக்கின்ற சிவபெருமான் அன்புடன் வணங்கி அவரின் வழியாக பிரணவ உபதேசஞ் செய்த சிவசற்குருவே, சார்த்திய வேலானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோள்மீது பொருந்தியிருக்கின்ற முருகப்பெருமானே; பல வரங்களைப் பெற்று உயர்ந்த சூரன் அழியும்படி கோபித்தவரே, விரும்பிக் கையிற் பிடித்த பாசக் கயிற்றோடு இயம தூதுவர் வந்து என்னை வருத்தாமல் (மரண வேதனையால்) அடியேன் அயர்வுற்றிருக்கும்போது அடியேனுடைய துன்பத்தைத் தீர்க்க (நீ) பெரிய மயில்மீது ஏறி என் முன்னே (நீர்) வந்தருளல் வேண்டும்.

**2.**

இறவாமல் பிறவாமல்
எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான
பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே
குகனேசொற் குமரேசா
கறையானைக் கிளையோனே
கதிர்காமப் பெருமாளே

**பொழிப்புரை :**

வேடர் குலத்துக் குறப்பெண்ணாகிய வள்ளி நாயகியாரை விரும்பித் திருமணம் செய்தவனே. அடியார்களின் மனமாகிய குகையில் வாழ்கின்றவனே. சொல்லுக்கு அரசனே, உரல் போன்ற கால்களும், யானை போன்ற உருவமும் உடைய கணபதிக்குத் தம்பியே (இலங்கையில்) கதிர்காமத்தலத்தில் விரும்பி உறைந்துள்ள தலைவனே. இறவாமலும், மீண்டும் பிறவாமலும் நான் இருக்கும் வகையில் என்னை உன் அடிமையாக்குகின்ற நல்ல குருவாக நீ என் முன் வந்தருளல் வேண்டும். அவ்வாறு வந்து என் உலக வாழ்வை முடித்து முத்தி என்கின்ற பெருவாழ்வை நீ எனக்குத் தந்தருளல் வேண்டும்.
(கறை – உரல், திரம் – முத்தி)

தனன தான தத்த தனதான
தனன தான தத்த தனதான

**3.**

எதிரி லாத பத்தி தனைமேவி
இனிய தாணி னைப்பை யிருபோதும்
இதய வாரி திக்கு ளுறவாகி
எனது ளேசி றக்க அருள்வாயே
கதிரகாமவெற்பி லுறைவோனே
கனகமேரு வொத்த புயவீரா
மதுர வாணியுற்ற கழலோனே
வழுதி கூனிமிர்த்த பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொழிப்புரை :**

கதிரமலைக் கந்தனே; பொன்மலை போன்ற புயத்தை உடையவனே. இனிய ஒலியையுடைய வீரக்கழலை அணிந்தவனே கூன்பாண்டியனது கூனை மாற்றி அவனை நிமிரச் செய்தவனே, பெருமாளே ! என்னை உன்னிடம் பக்தி உடையவனாக்கி உன்னிடம் இனிய திருவடிகளின் நினைவு இரவும் பகலும் என்றும் மறவாது என்மனதுள் அலையும்படி நிலைத்து நின்று சிறக்க நீர் அருளுவீராக.

4. உம்பர்தரு தேநுமணி கசிவாகி
ஒண்கடலுள் தேன் அமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகப் பலகாலும்
என்றன் உயிர்க்கு ஆதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர் தமக்கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானை முகப் பெருமானே.

**பொழிப்புரை :**

இளையவருக்கு இடையூறு நீக்கித் காரிய சித்தியாக்கியவர் சிவ பெருமானை வலம் வந்து (முதலில்) பரிசு பெற்றவர். அன்பர்களுக்கு உறுதியாக்கம் தருபவர். வேண்டிய வேண்டியாங்கருளும் மதவேள் விநாயகர். அவரைத் துதித்தால் துரிதமாகவே காரியம் சாதிக்கலாம் என்பதை உணர்த்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் வணக்கம்.

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

# பஞ்ச புராணம்

(தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம்)

## தேவாரம்

**தலம் :** திருவாலவாய் **பண்:** புறநீர்மை

**திருச்சிற்றம்பலம்**

1. மங்கையர்க் கரசி வளவர் கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாள்தொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகனாய்
வேதமும் பொருள்களு மருளி
அங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த
ஆலவாயாவது மிதுவே

**திருச்சிற்றம்பலம்.**

**தலம்:** திருவண்ணாமலை **பண்** – நட்டபாடை

**திருச்சிற்றம்பலம்**

2. உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம்
அறுமே.

**திருச்சிற்றம்பலம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

3. மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்
பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும்பிறந் தேன்இ னிப்பிற
வாத தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை
ஊரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாஉனை நான்ம றக்கினுஞ்
சொல்லும் நா நமச்சிவாயவே.

திருச்சிற்றம்பலம்.

# திருவாசகம்

தலம்-திருவாரூர்

திருச்சிற்றம்பலம்

உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன்
பேர் வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன் கற்பனவும்
இனியமையும்
குற்றாலத் தமர்ந்துறையும் கூத்தாஉன்
குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக
வேண்டுவனே.

திருச்சிற்றம்பலம்.

தலம்- திருவண்ணாமலை

திருச்சிற்றம்பலம்

ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளானை
சேயானைச் சேவகனைத் தென்னவன் பெருந்துறையின்
மேயானை வேதியனை மாதிருக்கும் பாதியனை
நாயான நந்தம்மை ஆட்கொண்ட நாயகனைத்
தாயான தத்துவனைத் தானே உலகேழும்
ஆயானை ஆள்வானைப்பாடுதுங்காண் அம்மானாய்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

வேண்டத் தக்க தறிவோய் நீ வேண்ட
முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயனமாற் கரியோய் நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன்று உண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே.

திருச்சிற்றம்பலம்

## திருவிசைப்பா

**தலம் :** கோயில் **பண் :** பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

இடர் கெடுத் தென்னை ஆண்டுகொண் டென்னுள்
இருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ
அடல்விடைப் பாகா அம்பலக் கூத்தா
அயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின் றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

திருச்சிற்றம்பலம்.

**தலம்:** கோயில் **பண் -** பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன் செய் அம்பலத்தரசே
ஏறணி கொடியெம் மீசனே உன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசையே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

**தலம்:-** கோயில் **பண்-**பஞ்சமம்

**திருச்சிற்றம்பலம்**

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் இதையுஞ் சிலதேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத்திரள்மேரு விடங்கன்
விடைப்பாகன்
பல்லாண்டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

**திருச்சிற்றம்பலம்**

**தலம்:** **பண்:**

**திருச்சிற்றம்பலம்**

சீருந்திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உளறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

**திருச்சிற்றம்பலம்**

## திருப்புராணம்

**திருச்சிற்றம்பலம்**

கைகளுந் தலைமீதேற கண்ணில் ஆனந்த வெள்ளம்
மெய்யெல்லாம் பொழிய வேத முதல்வரைப் பணிந்து போற்றி
ஐயனே அடியனேனை அஞ்சேல் என்று அருளவல்ல
மெய்யனே என்றுவீட லாலவாய் விளம்பலுற்றார்

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

சிந்தை இடையறா அன்பும் திருமேனி தன்னில் அசைவும்
கந்தம் மிகையாம் கருத்தும் கைஉழவாரப் படையும்
வுந்திழி கண்ணீர் மழையும் வடிவிற்பொலி திருநீறும்
அந்தமிலாத் திருவேடத் தரசும்எதிர் வந்தணைய.

திருச்சிற்றம்பலம்

# திருமந்திரம்

சைவத்திருமுறைகள் பன்னிரண்டிலும் பத்தாவதாக வைக்கப்பட்டிருப்பது திருமந்திரம் ஆகும். இதனைத் திருமூலர் அருளினார். திருமுறைகள் எல்லாம் பெரும்பாலும் தோத்திர நூல்களாக இருக்க, திருமந்திரம் ஒன்று மட்டும் சாத்திரநூல்களாத் திகழ்கிறது. தமிழில் எழுந்த முதல் ஞானநூல் திருமந்திரமாகும். ஆகமநூல் கூறும் பெரும்பாலான பொருள்களைத் திருமந்திரம் எமக்குச் செந்தமிழில் தருகிறது. ஆதலால் இதனைத் '**தமிழ் ஆகமம்**' என்பர். திருமந்திரம் ஒரு வாழ்க்கை நூலாகும். திருமூலர், பெரியபுராணம் கூறும் அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவராவார். திருமூலர் திருக்கைலையில் இருந்த முனிவர், திருநந்தி தேவரிடம் மெய்ப்பொருள் கேட்டவர் ஆவர்.

யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு விற்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரைதானே.
உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிவார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காளாமணி விளக்கே.

பின்னைநின் றென்னே பிறவி பெறுவது
முன்னை நன்றாக முயல்தவஞ் செய்கிலர்
என்னை நன்றாக இறைவன் படைத்தான்
தன்னை நன் றாகத் தமிழ் செய்யுமாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவசிவ என்கிலர் தீவனை யாளர்
சிவசிவ என்றிடத் தீவனை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே.

## கந்தபுராணம்

கந்தபுராணத்தை இயற்றியவர் கச்சியப்ப சிவாச்சாரியார். இவர் 14ஆம் நூ.ஆ காஞ்சி நகரில் வாழ்ந்தவர். அங்குள்ள முருகன் கோவிலில் பூசை செய்து வந்தவர். ஒருநாள் முருகன் சிவாசாரியாரின் கனவில் தோன்றி, **'தன் சரிதத்தைச் செந்தமிழில் பாடவேண்டும்** எனக் கட்டளையிட்டார். **'திகட சக்கர'** என்ற பாடல் அடியையும் முருகனே கொடுத்தார். இவ்வாறு பாடப்பட்டதே கந்தபுராணம். இதில் பதினோராயிரம் பாடல்கள் உள்ளன. முருகன் ஈசனோடு ஞானமொழி பேசியவன்; பகைவனாகிய சூரனையே ஞானமுறச் செய்தவன்.

அருவமும் உருவு மாகி
அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப்
பிழம்பதோர் மேனி யாகச்
கருணை கூர் முகங்கள் ஆறுங்
கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு
உதித்தனன் உலக முய்ய

முழுமதி யன்ன ஆறு
முகங்களும் முந்நான் காகும்
விழிகளின் அருளும் வேலும்
வேறுள படையின் சீரும்
அழகிய கரமீர் ஆறும்
அணிமணித் தண்டை ஆர்க்கும்
செழுமலர் அடியும் கண்டான்
அவன்தவம் செப்பற் பாற்றோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறிரு தடந்தோள் வாழ்க; அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க; குக்குடம் வாழ்க; செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க; யானைதன் அணங்கும் வாழ்க;
மாறிலா வள்ளி வாழ்க; வாழ்க சீர் அடியார் எல்லாம்.

## கந்தர் அநுபூதி

ஆனா வமுதே அயில்வேல் அரசே
ஞானா கரனே நவிலத் தகுமோ
யானாகி என்னை விழுங்கி வெறும்
தானாய் நிலைநின்றது தற்பரமே.

நாதா குமரா நமவென்று அரனார்
ஓதாய் எனஓதியது எப்பொருள் தான்
வேதா முதல் விண்ணவர் சூடும்மலர்ப்
பாதா குறமின்பத சேகரனே.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உருவாய் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

## பட்டினத்துப் பிள்ளையார் அருளியது

கல்லாப் பிழையும் கருதாப் பிழையும் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப்பிழையும் நின்
அஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும் தொழாப்
பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் இறைவா
கச்சியேகம்பனே.



4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்செயலாவது யாதொன்றுமில்லை இனித் தெய்வமே
நின்செயலென்று உணரப்பெற்றேன் - இந்த ஊனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்று மில்லைப் பிறப்பதற்கு
முன்செய்த தீவினையோ இங்கனே வந்து மூண்டதுவே.

முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவிலொரு
பிடிசாம்ப ராய்வெந்து மண்ணாவதுங்கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல் லாற்பொன்னி
னம்பலவாணர்
அடிசார்த்து நாமுய்ய வேண்டுமென் றேயறிவாரில்லையே.

## கந்தலரங்காரம் (பழநி பாடல்)

சேல்பட்டழிந்தது செந்தூர்
வயற் பொழில் தேங்கடம்பின்
மால்பட்டழிந்தது பூங்கொடி
யார் மனம் மாமயிலோன்
வேல்பட்டழிந்து வேலையும்
சூரனும் வெற்பும் அவன்
கால் பட்டழிந்தது இங்கென் தலை
மேல் அயன் கையெழுத்தே.

நாள் என்செய்யும் வினைதான் என்
செய்யும் எனை நாடிவந்த
கோள் என்செய்யும் கொடுங் கூற்றுஎன்
செய்யும் குமரேசர் இரு
தாளும் சிலம்பும் சதங்கையும்
தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன்னே
வந்து தோன்றிடினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிராமி அந்தாதி

அபிராமி அந்தாதி என்னும் நூல் **அபிராமிப் பட்டரால்** பாடப்பட்டது. அதில் அந்தாதித் தொடராக நூறு பாடல்கள் உள்ளன. நவராத்திரிகால முதல் மூன்று நாட்களில் **துர்க்கைக்கான** பாடல்களையும், அடுத்து வரும் மூன்று நாட்களில் **இலக்குமி** துதிப் பாடல்களையும், இறுதி மூன்று நாட்களில் **சரஸ்வதியைத்** தொழ சகலகலாவல்லி மாலையையும் படிக்கலாம். புரட்டாதி மாத வளர்பிறை முதல் ஒன்பது தினங்கள் நோற்கப்படும் விரதம் **நவராத்திரி** விரதமாகும்.

**1.** மனிதருந் தேவரு மாயா
முனிவரும் வந்துசென்னி
குனிதருஞ் சேவடிக் கோமள
மேகொன்றை வார்சடைமேற்
பனிதருந் திங்களும் பாம்பும்
பகீரதி யும்படைத்த
புனிதரு நீயுமென் புந்தியெந்
நாளும் பொருந்துகவே.

**2.** நின்று மிருந்துங் கிடந்து
நடந்து நினைப்பதுன்னை
யென்றும் வணங்குவ துன்மலர்த்
தாளெழு தாமறையி
னொன்று மரும்பொரு ளேயரு
ளேயுமை யேயிமயத்
தன்றும் பிறந்தவ ளேயழி
யாமுத்தி யானந்தமே.

**3.** பூத்தவ ளேபுவ னம்பதி
னான்கையும் பூத்தவண்ணங்
காத்தவ ளேபின் கரந்தவ
ளேகறைக் கண்டனுக்கு
மூத்தவ ளேயென்று மூவா
முகுந்தற் கிளையவளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்தவ ளேயுன்னை யன்றிமற்
றோர்தெய்வம் வந்திப்பதே.

4. வவ்விய பாகத் திறைவரு
நீயு மகிழ்ந்திருக்குஞ்
செவ்வியு முங்க டிருமணக்
கோலமுஞ் சிந்தையுள்ளே
யவ்வியத் தீர்த்தெனையாண்டபொற்
பாதமு மாகிவந்து
வெவ்விய காலனென் மேல்வரும்
போது வெளிநிற்கவே.

5. மணியே மணியி னொளியே
யொளிரு மணிபுனைந்த
வணியே யணியு மணிக்கழ
கேயணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே
யமரர் பெருவிருந்தே
பணியே னொருவரை நின்பத்ம
பாதம் பணிந்தபின்னே.

6. சொல்லும் பொருளு மெனநட
மாடுந் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி
யேநின் புதுமலர்த்தா
ளல்லும் பகலுந் தொழுமவர்க்
கேயழி யாவரசுஞ்
செல்லுந் தவநெறி யுஞ்சிய
லோகமுஞ் சித்திக்குமே.

7. சித்தியுஞ் சித்தி தருந்தெய்வ
மாகித் திகழும்பரா
சத்தியுஞ் சத்தி தழைக்குஞ்
சிவமுந் தவமுயல்வார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தியு முத்திக்கு வித்தும்வித்
தாகி முளைத் தெழுந்த
புத்தியும் புத்தியினுள்ளே
புரக்கும் புரத்தையன்றே.

8. வெறுக்குந் தகைமைகள் செய்யினுந்
தம்மடி யாரைமிக்கோர்
பொறுக்குந் தகைமை புதியதன்
றேபுது நஞ்சை யுண்டு
கறுக்குந் திருமிடற் றானிடப்
பாகங் கலந்த பொன்னே
மறுக்குந் தகைமைகள் செய்யினும்
யானுனை வாழ்த்துவனே.

9. தனந்தருங் கல்வி தருமொரு
நாளுந் தளர்வறியா
மனந்தருந் தெய்வ வடிவுந்
தருநெஞ்சில் வஞ்சமில்லா
வினந்தரு நல்லன வெல்லாந்
தருமன்ப ரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாளபி
ராமி கடைக்கண்களே.

10. ஆத்தாளை யெங்க ளபிராம
வல்லியை யண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத்
தாளைப் புவியடங்கக்
காத்தாளை யங்குச பாசாங்
குசமுந் கரும்புமங்கை
சேர்த்தாளை முக்கண்ணி யைத்தொழு
வார்க்கொரு தீங்கில்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரிப் பாட்டு
# (மாதா பராசக்தி)

## பராசக்தி
## மூன்றும் ஒன்றாகிய மூர்த்தி

மாதா பராசக்தி வையமெல்லாம் நீ நிறைந்தாய்
ஆதாரம் உன்னையல்லால் ஆரெமக்குப் பாரினிலே
ஏதாயினும் வழிநீ சொல்வாய் எம துயிரே!
வேதாவின் தாயே! மிகப் பணிந்து வாழ்வோமே

## வாணி

வாணி கலைத்தெய்வம் மணிவாக் குதவிடுவாள்
ஆணிமுத்தைப் போல அறிவு முத்து மாலையினாள்
காணுகின்ற காட்சியாய்க் காண்பதெலாங் காட்டுவதாய்
மாணுயர்ந்து நிற்பாள் மலரடியே சூழ்வோமே

## ஸ்ரீதேவி

பொன்னரசி நாரணனார் தேவி புகழரசி
மின்னு நவ ரத்தினம் போல்மேனி யழகுடையாள்
அன்னையவள் வையமெல்லாம் ஆதரிப்பாள்: ஸ்ரீதேவி
தன்னிரு பொற்றாளே சரண்புகுந்து வாழ்வோமே

## பார்வதி

மலையிலே தான் பிறந்தாள் சங்கரனை மாலையிட்டாள்
உலையிலே யூதி உலகக் கனல் வளர்ப்பாள்
நிலையில் உயர்த்திடுவாள் நேரே அவள் பாதம்
தலையிலே தாங்கித் தரணிமிசை வாழ்வோமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்குமி துதி

இத்துதிப் பாடல்கள் அதிவீரராமபாண்டியன் பாடிய **காசிகாண்டம்** என்னும் புராணத்தில் உள்ளதாகும்.

1. மடற்கமல நறும்பொகுட்டில் அரசிருக்குஞ்
செந்துவர்வாய் மயிலே மற்றுன்
கடைக்கணருள் படைத்தன்றோ மணிவண்ணன்
உலகமெலாங் காவல் பூண்டான்
படைத்தனனான் முகக்கிழவன் பசுங்குழவி
மதிபுனைந்த பரமன் றானும்
துடைத்தனன்நின் பெருஞ்சீர்த்தி எம்மனோ
ராலெடுத்துச் சொல்லற் பாற்றோ.

2. மல்லல்நெடும் புவியனைத்தும் பொதுநீக்கித்
தனிபுரக்கும் மன்னர் யாரும்
கல்வியினிற் பேரறிவிற் கட்டழகில்
நிகரில்லாக் காட்சி யோரும்
வெல்படையிற் பகைதுரந்து வெஞ்சமரில்
வாகைபுனை வீரர் தாமும்
அல்லிமலர்ப் பொகுட்டுறையும் அணியிழைநின்
அருள்நோக்கம் அடைந்துள்ளாரே.

3. செங்கமலப் பொலந்தாதிற் றிகழ்தொளிரும்
எழின்மேனித் திருவே வேலை
அங்கணுல கிருள்துரக்கும் அலர்கதிராய்
வெண்மதியாய் அமரர்க் கூட்டும்
பொங்கமுலாய் உலகளிக்கும் பூங்கொடியே
நெடுங்கானிற் பொருப்பின் மண்ணில்
எங்குளைநீ அவணன்றோ மல்லல்வளஞ்
சிறந்தோங்கி இருப்ப தம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லி மாலை



இப்பிரபந்தத்தின் பெயர் '**சரஸ்வதி தோத்திரம்**' என்பர். இதனைப் பாடியவர் '**குமரகுபர சுவாமிகள்**'. இவர் காசிக்குச் சென்றபோது, அந்நகர் தில்லி மன்னனின் ஆட்சிக்கு உட்பட்டிருந்ததால் அங்குள்ள இந்துக்கள் நலிவுற்றனர். இந்து மதத்தை மேலும் விளங்கச் செய்வதற்காக தில்லிபாதுஷா சக்கரவர்த்தியை நேரிற் சென்று காணவிரும்பினார் சுவாமிகள். எனவே காரியச்சித்தி பெற்று மீளும் பொருட்டுக் கலைமகள் அருளை வேண்டி இப் பாமாலையைப் பாடினார்.

1. வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோசக மேழுமளித்
துண்டானுடறங்க வொழித்தான்பித்
தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலா வல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. நாடும் பொருட் சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடும் சுமக்குங் கரும்பே
சகல கலா வல்லியே.

3. அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்த்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலா வல்லியே.

4. தூக்கும் பனுவற் றுறைதோய்த்த
கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலா வல்லியே.

5. பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு கமழும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலா வல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பண்ணும் பரதமும் கல்வியு
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங்காலுமன்பர்
கண்ணுங் கருத்து நிறைந்தாய்
சகல கலா வல்லியே.

7. பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலா வல்லியே.

8. சொல்லிற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ் சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலா வல்லியே.

9. சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் றோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே
சகல கலா வல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. மண்கண்ட வெண்குடை கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன் போற்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலா வல்லியே.



## சரஸ்வதி வணக்கம்.

ஒவ்வொரு நாளும் சரஸ்வதிக்கு வணக்கம் செலுத்துவதற்குப் பின்வரும் பாடல்களை நாம் பாடலாம்.

1. தாவறுமுலகெலாந் தந்த நான்முகத்
தேவுதன் துணைவியாய்ச் செறிந்த பல்லுயிர்
நாவுதோ றிருந்திடு நலங்கொள் வாணிதன்
பூவடி முடிமிசைப் புனைந்து போற்றுவாம்.

- கந்தபுராணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப்பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள் - வெள்ளை
அரியாசனத்தில் அரசரோ டெம்மை
சரியாசனம் வைத்தாய். - காளமேகப்புலவர்

3. படிக நிறமும் பவளச் செவ்வாயுங்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும் - துடியிடையும்
அல்லும் பகலு மனவரத முந்துதித்தாற்
கல்லுஞ்சொல் லாதோ கவி. - காளமேகப்புலவர்

## சரஸ்வதி துதி

1. புத்தகத் துள்ளுறை மாதே
புவி லமர்ந்துறை வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளை நங்காய்
வேதப் பொருளுக் கிறைவி
முத்தின் குடையுடை யாளே
மூவுல குந்தொழு தேவி
செப்புக் கவித்தநன் முலையாய்
செவ்வரி யோடிய கண்ணாய்
முத்து நிறைந்த வெண்பல்லாய்
முருக்கம் பூமேனி நிறத்தாளே
தக்கோலந் தின்ற துவர்வாயாய்
சரஸ்வதி யென்னுந் திருவே
எக்காலு முன்னைத் தொழுவோம்
எழுத்தறி புத்தி பண்ணுவிப்பாய்
ஆக்கா யெம்பெரு மாட்டி
அழகிய பூவனை மீதாய்
நோக்கா யென்மிடி தீர
நொடிக்கும் பிரமாணத்தி னோக்காயே
சாலி னெல்லரிசி கொண்டு
சரஸ்வதி பூசை பண்ணிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலொடு பழத்தை நிரப்பிப்
பரவித் தொழுவோ நங்காய்
நங்காய் நங்காய் நமஸ்து
ஞானக் கொழுந்தே நமஸ்து
கல்விக் கரசே நமஸ்து
கணக்கறி தேவி நமஸ்து
சொல்லும் பொருளே நமஸ்து
சூக்கும ரூபி நமஸ்து.

## சரஸ்வதி (கலைமகள்) துதி

1. வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்
கொள்ளை யின்பம் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ள தாம் பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள் நின் றொளிர்வாள்
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொருளாவாள்.
(வெள்ளைத்)

2. மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்
மக்கள்பேசும் மழலையில் உள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியின் நாவை இருப்பிடம் கொண்டாள்
கோத கன்ற தொழிலுடைத் தாகுக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத்தின் எழிலிடை யுற்றாள்
இன்ப மேவடி வாகுடம் பெற்றாள்.
(வெள்ளைத்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. வஞ்ச மற்ற தொழில்புரிந் துண்டு
வாழும் மாந்தர் குல தெய்வமாவாள்
வெஞ்ச மர்க்குயி ராகிய கொல்லர்
வித்தை யோர்ந்திடு சிற்பியர் தச்சர்
மிஞ்ச நற்பொருள் வாணிகச் செய்வோர்
வீர மன்னர் பின் வேதியர் யாவரும்
தஞ்ச மென்று வணங்கிடுந் தெய்வம்
தரணி மீதறி வாகிய தெய்வம்.

(வெள்ளைத்)

4. தெய்வம் யாவும் உணர்ந்திடும் தெய்வம்
தீமை காட்டி விலக்கிடுந் தெய்வம்
உய்வ மென்ற கருத்துடை யோர்கள்
உயிரு னுக்குயி ராகிய தெய்வம்
செய்வ மென்றொரு செய்கை எடுப்போர்
செம்மை நாடிப் பணிந்திடு தெய்வம்
கைவ ருந்தி உழைப்பவர் தெய்வம்
கவிஞர் தெய்வம் கடவுளர் தெய்வம்

(வெள்ளைத்)

5. செந்தமிழ் மணி நாட்டிடை யுள்ளீர்
சேர்ந்தித் தேவைவணங்குவம் வாரீர்
வந்தனம் இவட் கேசெய்வ தென்றால்
வாழி யஃதிங் கெளிதென்று கண்டீர்
மந்தி ரத்தை முணுமுணுத் தேட்டை
வரிசையாக அடுக்கி அதன் மேல்
சந்த னத்தை மலரை இடுவோர்
சாத்தி ரம்இவள் பூசனை யன்றாம்.

(வெள்ளைத்)

6. வீடு தோறும் கலையின் விளக்கம்
வீதி தோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ளன வூர்கள்
நகர்க ளெங்கும் பல பல பள்ளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடு கல்வியி லாதொரு ரூரைத்
தீயி னுக்கிரை யாக மடுத்தல்
கேடு தீர்க்கும் அமுதமென் அன்னை
கேண்மை கொள்ள வழியிவை கண்டீர்.
(வெள்ளைத்)

7. ஊணர் தேசம் யவனர்தந் தேசம்
உதய ஞாயிற் றொளி பெறுநாடு
சேண கன்றதோர் சிற்றடிச் சீனம்
செல்வப் பார சிகப்பழந் தேசம்
தோண லத்த துருக்கம் மிசிரம்
சூழ்க டற்கப் புறத்தினில் இன்னும்
காணும் பற்பல நாட்டிடை யெல்லாம்
கல்வித் தேவி யின் ஒளிமிகுந் தோங்க.
(வெள்ளைத்)

8. ஞானம் என்பதோர் சொல்லின் பொருளாம்
நல்ல பாரத நாட்டிடை வந்தீர்
ஊனம் இன்று பெரிதிழைக் கின்றீர்
ஓங்கு கல்வி உழைப்பை மறந்தீர்
மான மற்று விலங்குக ளொப்ப
மண்ணில் வாழ்வதை வாழ்வென லாமோ?
போனதற்கு வருந்துதல் வேண்டா
புன்மை தீர்ப்ப முயலுவம் வாரீர்
(வெள்ளைத்)

9. இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆல யம்பதி னாயிரம் நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்.
(வெள்ளைத்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. நிதிமிகு ந்தவர் பொற்குவை தாரீர்
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்
அதுவு மற்றவர் வாய்ச்சொல் அருளீர்
ஆண்மை யாளர் உழைப்பினை நல்கீர்
மதுரத் தேமொழி மாதர்க ளெல்லாம்
வாணி பூசைக் குரியன பேசீர்
எதுவும் நல்கியிங் கெவ்வகை யானும்
இப்பெருந் தொழில் நாட்டுவம் வாரீர்.

(வெள்ளைத்)

(மகாகவி சுப்பிரமணியபாரதியார்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணபதி காயத்திரி மந்திரம்**
**ஓம் தத் புருஷாய வித்மஹே**
**ஏக தந்தாய வீத்மஹே**
**வக்ர துண்டாய தீமஹி**
**தந்தோ தந்தி ப்ரசோதயாத்//**

## காயத்திரி மந்திரம்

ஓம் பூர் புவஸ்ஸுவஹா
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி.
தியோ யோந ப்ரசோதயாத் //

## விநாயகர் வணக்கம்



திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர் தம் கை.

விநாயகனே வெவ்வினையை வேரறுக் வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

- திருவிரட்டை மணிமாலை-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5

# கச்சியப்ப சுவாமிகள் அருளிச் செய்த விநாயகர் கவசம்

திருச்சிற்றம்பலம்

வளர் சிகையைப் பராபரமாய் வயங்கு
விநாயகர் காக்க வாய்த்த சென்னி
யளவுபடா வதிகசவுந் தரதேக
மகோற்கடர்தா மமர்ந்து காக்க
விளரற நெற்றியை யென்றும் விளங்கிய
காசிபர் காக்க புருவந் தம்மைத்
தளர்வின் மகோதரர் காக்க தடவிழிகள்
பாலசந் திரனார் காக்க. 1

கவின்வளரு மதரங் கசமுகர் காக்க
தாலங்கணக் கிரீடர் காக்க
நவில்சிபுகங் கிர்சை சுதர்காக்க நனிவாக்கை
விநாயகர் தாங் காக்க
அவிர்நகை துன்முகர் காக்க அள்ளெழிற்
செஞ்செவி பாசமாணி காக்க
தவிர்தலுறா திளங்கொடிபோல் வளர்மணி நாசியைச்
சிந்திதார்த்தர் காக்க. 2

காமருபூ முகந்தன்னைக் குணேசர் நனிகாக்க
களங்கணேசர் காக்க
வாமமுறு மிருதோளும் வயங்குகந்த பூர்வசர்தா
மகிழ்ந்து காக்க
ஏமமுறு மணிமுலை விக்கின விநாயகர் காக்க
விதயந் தன்னைத்
தோமகலுங் கணநாதர் காக்க வகட்டினைத்
துலங்கே ரம்பர் காக்க. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்க மிரண்டையும் தராதரர் காக்கப்
பிருட்டத்தைப் பாவ நீக்கும்
விக்கின காரர்காக்க விளங்கி லிங்கம்
வியாளபூ டணர்தாங் காக்க
தக்கருய்யந் தன்னைவக் கிர துண்டர்
காக்கசக னத்தை யல்லல்
உக்க கணப்பர் காக்க ஊருவை மங்கள
மூர்த்தி யுவந்து காக்க. 4

தாழ் முழந்தாள் மகாபுத்தி காக்க விருபதமேக
தந்தர் காக்க
வாழ் சுரங்கிப் பிரப்பிர சாதனர் காக்க முன்கையை
வணங்குவார் நோய்
ஆழ்தரச் செய்யா சாபுரகர் காக்க விரல்பதும
வத்தர் காக்க
கேழ்கிளரு நகங்கள் விநாயகர் காக்க
கிழக்கினிற் புத்தீசர் காக்க. 5

அக்கினியிற் சித்தீசர் காக்க வுமா புத்திரரென்
னாசைக் காக்க
மிக்கநிருதியிற் கணேசுரர் காக்க விக்கினவர்த்
தனர்மேற் கென்னுந்
திக்கதனிற் காக்க வாயுவிற் கசகன்னன் காக்க
திகழ் உதீசி
தக்கநிதிபன் காக்க வடகிழக்கி லீசநந்
தனரே காக்க 6

ஏகதந்தர் பகன்முழுதுங் காக்க விரவினுஞ் சந்தி
யிரண்டன் மாட்டும்
ஓகையின் விக்கின கிருது காக்க விராக்கதர்பூத
முறுவே தாளம்
மோகினி பேயிவையாதி யுயிர்த்திறத்தால்
வருந்துயரு முடிவிலாத
வேகமுறு பிணிபலவும் விலக்குபு பாசாங் குசர்தாம்
விரைந்து காக்க. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிஞானந் தவந்தான மானமொளி புகழ்குலம்வண்
சரீரம் முற்றும்
பதிவான தனந்தானியங் கிருக மனைவி மைந்தர்
பயினட் பாதிக்
கதியாவுங் கலந்து சர்வாயுதர் காக்க காமர்பவுத்
திரர்முன் னான
விதியாகுஞ் சுற்றமெலா மயூரேச ரெஞ்ஞான்றும்
விரும்பிக் காக்க. 8

வென்றிசீவி தங்கபிலர் காக்க கரியாதி யெலாம்
விகடர் காக்க
என்றிவ்வா றிது தன்னைமுக் காலமு மோதிடினும்பா
லிடையூ றொன்றும்
ஒன்றுறா முனிவரர்கா ளறிமின்கள் யாரொருவ
ரோதி னாலும்
மன்றவாங் கவர் தேகம் பிணியறவச் சிரதேக
மாகி மன்னும். 9

திருச்சிற்றம்பலம்.

## நக்கீரதேவர் அருளிய விநாயகர் திருவகவல்

சீர்தரு மூலச் செழுஞ்சுடர் விளக்கே
கார்நிற மேனிக் கற்பகக் களிறே
அல்லல் வினையை யறுத்திடு ஞான
வல்லபை தன்னை மருவிய மார்பா!
பொங்கர வணிந்த புண்யமூர்த்தி
சங்கர னருளிய சற்குரு விநாயக
ஏழை யடியே னிருவிழி காண
வேழ முகமும் வெண்பிறைக் கோடும்
பெருகிய செவியும் பேழை வயிறுந்
திருவளர் நுதலில் திருநீற் றழகுஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுத்த கண்ணுஞ் சீதளப் பார்வையும்
நறுந்திகழ் நாசியும் நாண்மலர்ப் பாதமும்
நவமணி மகுட நன்மலர் முடியும்
கவச குண்டலக் காந்தியும் விளங்கச்
சிந்துரத் திலகச் சந்தனப் பொட்டும்
ஐந்து கரத்தி னழகும் வீற்றிருக்க
பாச வினையைப் பறித்திடு மங்குச
பாசத் தொளியும் பன்மணி மார்பும்
பொன்னா பரணமும் பொருந்துமுந்நூலும்
மின்னா மெனவே விளங்குபட்டழகும்
உந்திச் சுழியு முரோமத் தழகுந்
தொந்தி வயிறுந் துதிக்கையுந் தோன்ற
வேதனு மாலும் விமலனு மறியாப்
பாதச் சதங்கை பலதொனி யார்ப்பத்
தண்டைச் சிலம்புந் தங்கக் கொலுசும்
எண்டிசை மண்டல மெங்கு முழங்கத்
தொகுது துந்துமி தொந்தோ மெனவே
தகுகு திந்திமி தாள முழங்க
ஆடிய பாத மண்டர்கள் போற்ற
நாடிமெய் அடியார் நாளுந் துதிக்கக்
கருணை புரிந்து காட்சிதந் தருள
இருளைக் கடிந்து யெங்கும் நிறையப்
பொங்குபே ரொளியாய்ப் பொன்மலை போலத்
திங்கள் முடியான் றிருவுள மகிழ
வந்த வாரண வடிவையுங் காட்டிச்
சிந்தை வளர்த்த சீரடி யார்க்கு
இகபர சாதன மிரண்டு முதவி
அகவினைத் துன்ப மகந்தை யறுத்து
மூலா தார முச்சுடர் காட்டி
வாலாம் பிகைதன் வடிவையுங் காட்டி
மாணிக்க மேனி மலர்பதங் காட்டிப்
பேணிப் பணியப் பீஜா ஹ்ரமும்
ஓமென றுதித்த ஓங்காரத் துள்ளே
ஆமென் றெழுத்த அஹர வடிவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைபிங் கலைக ளிரண்டின டுவே
கடைமுனை சுழிமுனைக் கபாலமுங் குறித்து
மண்டல மூன்றும் வாயுவோர் பத்துங்
குண்டலி யசபை கூறிய நாடியும்
பூதமும் பொறியும் புகழ்குண மூன்றும்
வாதனை செய்யுமறிவையுங் காட்டி
ஆறா தரா அங்குச நிலையைப் பேறாகி நின்ற
பெருமையுங் காட்டிப்
பஞ்ச மூர்த்திகள் பாகத் தமர்ந்த
பஞ்ச சக்திகளின் பாதமுங் காட்டி
நவ்வொடு மவ்வும் நடுவணை வீட்டில்
அவ்வு மாக்கினை அனாதி சதாசிவம்
மைவிழி ஞான மனோன்மணி பாதமும்
நைவினை நணுகா நாத கீதமும்
கண்டு வணங்கக் கண்ணைத் திறந்து
விண்டல மான வெளியையுங் காட்டி
ஐம்பத்தோ ரெழுத் தட்சர நிலையை
இன்ப சக்கர விதிதனைக் காட்டிப்
புருவ நடுவணை பொற்கம லாசான்
திருவிளை யாடலுந் திருவடி காட்டி
நாதமும் விந்தும் நடுநிலை காட்டிப்
போத நிறைந்த பூரணங் காட்டி
உச்சி வெளிதனி லுள்ளொளி காட்டி
வச்சிரம் பச்சை மரகத முத்துப்
பவளநைந்தளிங்கொளி காட்டிச்
சிவகயி லாயச் சேர்வையுங் காட்டிச்
சத்தம் பிறந்த தலத்தையும் காட்டித்
தத்துவந்தொண்ணூற் றாறையும் நீக்கிக்
கருவி கரணங் களங்க மறுத்து
மருவிய பிறவி மாயையை நீக்கி
உம்பர்கள் ரிஷிகள் ஒருவருங் காணா
அம்பர வெளியினருளையுங் காட்டிச்
சத்தி பராபரை சதாநந்தி நிராமய
நித்திய ரூபி நிலைமையுங் காட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியவர் ஞான வமிர்தமா யுண்ணும்
வடிவை யறியும் வழிதனைக் காட்டி
நாசி நுனியில் நடக்குங் கலைகள்
வாசிவா வென்று வாங்கிப் பிடித்து
நின்மல வடிவாய் நிறுவித் தப்புறம்
விண்மய மான விதத்தையும் காட்டித்
தராதல முழுதுந் தானாய நிறைந்த
பராபர வெளியைப் பணிந்திடக் காட்டி
என்னுட லாவி யிடம்பொரு ளியாவுந்
தன்னுடை வசமாந் தவநிலை காட்டி
நானெனு மாணவம் நாசம தாகத்
தானென வந்து தயக்கந் தீர
ஆன குருவா யாட்கொண் டருளி
மோன ஞான முழுது மளித்துச்
சிற்பரி பூரண சிவத்தைக் காண
நற்சிவ நிட்கள நாட்டமுந் தந்து
குருவுஞ் சீடனுங் கூடிக் கலந்து
இருவள மொருதனி யிடந்தனிற் சேர்ந்து
தானந்த மாகித் தற்பர வெளியில்
ஆனந்த போத அறிவைக் கலந்து
புவனத் தொழிலைப் பொய்யென் றுணர்ந்து
மவுன முத்திரையை மனத்தி லிருத்திப்
பெண்டு பிள்ளை பண்டு பதார்த்தங்
கண்டது மாயை கனவெனக் காட்டிப்
பாச பந்தப் பவக்கடல் நீக்கி
ஈச னிணையடி யிருத்தி மனத்தே
நீயே நானாய் நானே நீயாய்க்
காயா புரியைக் கனவென வுணர்ந்து
எல்லா முன்செய லென்றே யுணர
நல்லா யுன்னருள்வ நாட்டந் தருவாய்
காரண குருவே கற்பகக் களிறே
வாரண முகத்து வள்ளலே போற்றி!
நித்திய பூசை நைவேத்தியமும்
பத்தியாய்க் கொடுத்துப் பரமனே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏத்தி யுனுதின மெளியேன் பணியக்
கூற்றினை யுதைத்த குளிர்பதந் தந்து
ஆசு மதுர வமிர்த மளித்துப்
பேசு ஞானப் பேறெனக் கருளி
மனத்தில் நினைத்த மதுர வாசகம்
நினைவிலுங் கனவிலும் நேசம் பொருந்தி
அருண கிரியா ரவ்வை போலக்
கருத்து மிகுந்து கவிமழை பொழிய
வாக்குக் கெட்டா வாழ்வை யளித்து
நோக்கரு ஞான நோக்கு மளித்து
இல்லற வாழ்க்கை யிடையூற கற்றிப்
புல்ல ரிடத்திற் புகுந் துழலாமல்
ஏற்ப திகழ்ச்சி என்ப தகற்றிக்
காப்ப துனக்குக் கடன்கண் டாயே!
நல்வினை தீவினை நாடி வருகினுஞ்
செல்வினை யெல்லாஞ் செயலுன தாமால்
தந்தையும் நீயே தாயும் நீயே
எந்தையும் நீயே ஈசனும் நீயே
போத ஞானப் பொருளும் நீயே
நாதமும் நீயே நான்மறை நீயே
அரியும் நீயே அயனும் நீயே
திரிபுர தகனஞ் செய்தவன் நீயே
சத்தியும் நீயே சதாசிவம் நீயே
புத்தியும் நீயே பராந்தகன் நீயே
பத்தியும் நீயே பந்தமும் நீயே
முத்தியும் நீயே மோக்ஷமும் நீயே
ஏகமும் நீயே என்னுயிர் நீயே!
தேகமும் நீயே தேவனும் நீயே
உன்னரு ளன்றி யுயிர்த்துணை காணேன்
பின்னொரு தெய்வம் பேசவு மறியேன்
வேதன் கொடுத்த மெய்யிது தன்னில்
வாத பித்தம் வருத்திடு சிலேட்டுமம்
மூன்று நாடியு முக்குண மாகித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன் றும் வினையின் துன்ப மறுத்து
நாலா யிரத்து நானூற்று நாற்பத்தெட்டு
மேலாம் வினையை மெலியக் களைந்து
அஞ்சா நிலைமை யருளியே நித்தம்
பஞ்சா ஹரநிலை பாலித் தெனக்குச்
செல்வமும் கல்வியுஞ் சீரும் பெருக
நல்வர மேதரும் நான்மறை விநாயக!
சத்திய வாக்குச் சத்தா யுதவிப்
புத்திர னேதரும் புண்ணிய முதலே
வெண்ணீ றணியும் விமலன் புதல்வா
பெண்ணா முமையாள் பெறுகுஞ் சரனே
அரிதிரு மருகா அறுமுகன் றுணைவா
கரிமுக வாரணக் கணபதி சரணம்
குருவே சரணம் குணமே சரணம்
பெருவயி றோனே பொற்றாள் சரணம்
கண்ணே மணியே கதியே சரணம்
விண்ணே யொளியே வேந்தே சரணம்
மானத வாவி மலர்த்தடத் தருகிற்
றானத்தில் வாழும் தற்பரா சரணம்
உச்சிப் புருவத் துதித்துல களிக்குஞ்
சச்சி தானந்த சற்குரு சரணம்!
விக்கின விநாயகா தேவே ஓம்!
அரகர சண்முக பவனே ஓம்!
சிவசிவ மஹாதேவ சம்போ ஓம்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஔவையார் அருளிய
# விநாயகரகவல்

சீதக்களபச் செந்தாமரைப்பூம்
பாதச்சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரைஞாணும் பூந்துகிலாடையும்
வன்னமருங்கில் வர்ந்தழகெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந்தூரமும்
அஞ்சு கரமும் அஞ்குச பாசமும்
நெஞ்சிற்குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிருபுயமும்
மூன்று கண்ணும் மும்மதச்சுவடும்
இரண்டுசெவியும் இலங்குபொன்முடியுந்
திரண்ட முப்புரி நூல் திகமொளிமார்பும்
சொற்பதங்கடந்த துரியமெய்ஞ்ஞான
அற்புதநின்ற கற்பகக்களிறே
முப்பழநுகரும் முஷீகவாஹன!
இப்பொழுதென்ன யாட்கொள வேண்டித்
தாயாயெனக்குத் தானெழுந்தருளி
மாயாப்பிறவி மயக்கமுறுத்துத்
திருந்தியமுதலைந் தெழுத்துந்தெளிவாய்ப்
பொருந்த வேவந்தென் உளந்தனிற்புகுந்து
குருவடிவாகிக் குவலயந்தன்னில்
திருவடிவைத்துத் திறமிது பொருளென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடாவகைதான் மகிழ்ந்தெனக்கருளிக்
கேடாயுதத் தாற் கொடு வினைகளைந்தே
உவட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங்காட்டி
ஐம்புலன்றன்னை யடக்குமுபாயம்
இன்புறுகருணையின் இனிதெனக்கருளிக்
கருவிகளொடுங்குங் கருத்தினையறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொருநான்குந் தந்தெனக்கருளி
மலமொருமூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பதுவாயில் ஒருமந்திரத்தால்
ஐம்புலக்கதவை அடைப்பதுங்காட்டி
ஆறாதாரத் தங்குசநிலையும்
பேறாநிறுத்திப் பேச்சுரையறுத்தே
இடைபிங்கலையின் எழுத்தறிவித்துக்
கடையிற்சுழிமுனைக் கபால முங்காட்டி
மூன்றுமண்டலத்தின் முட்டியதூணின்
நான்றெழுபாம் பினாவிலுணர்த்திக்
குண்டலியதனிற் கூடியவசபை
விண்டெழுமந்திரம் வெளிப்படவுரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழுகனலைக்
காலாலெழும்புங் கருத்தறிவித்தே
அமுதநிலையும் ஆதித்தனியக்கமுங்
குமுதசகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக்கரத்தின் ஈரெட்டுநிலையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடற்சக்கரத்தின் உறுப்பை யுங்காட்டிச்
சண்முகதூலமுஞ் சதுர்முககூக்கமும்
எண்முகமாக இனிதெனக்கருளிப்
புரியட்டகாயம் புலப்படவெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரி சனப்படுத்திக்
கருத்தினிற்கபால வாயில்காட்டி
இருத்திமுத்தி இனி தெனக்கருளி
என்னையறிவித்து எனக்கருள்செய்து
முன்னைவினையின் முதலைக் களைந்து
வாக்குமனமும் இல்லாமனோலயந்
தேக்கியேஎன்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளியிரண்டுக் கொன்றிடமென்ன
அருடரு மானந்தத் தழுத்தியென் செவியில்
எல்லையில்லா ஆனந்தமளித்து
அல்லல்களைந்தே அருள் வழிகாட்டிச்
சத்தத்தினுள்ளே சதாசிவங்காட்டிச்
சித்தத்தினுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற்கனுவாய் அப்பாலுக்கப்பாலாய்க்
கணுமுற்றிநின்ற கரும்புள்ளேகாட்டி
வேடமும் நீறும் விளங்கநிறுத்திக்
கூடுமெய்த்தொண்டர் குழாத்துடன்கூட்டி
அஞ்சக்கரத்தின் அரும்பொருடன்னை
நெஞ்சக்கருத்தினிலையறிவித்துத்
"தத்துவநிலையைத் தந்தெனையாண்ட
வித்தக விநாயக விரை கழல்சரணே".

(முற்றிற்று.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்த சஷ்டி கவசம்



முருகவேள் தமிழ்த் தெய்வம். நக்கீரர் அருளிய திருமுருகாற்றுப்படை பத்துப் பாட்டின் முதற் பாட்டாக, ஆறுபடை கொண்ட முருகனது அற்புதத்தை எடுத்துக் காட்டுகிறது. முருகவேள் உடைய விரதங்களுள் தலையாய விரதம் கந்தசஷ்டி விரதமாகும். சரஸ்வதி கடாட்சம் **அருள்மொழி அரசு கலாநிதி திருமுருக கிருபானந்தவாரியார்** அவர்கள் கந்தசஷ்டி விரதத்தின் சிறப்பினை எடுத்துக் கூறும்போது 'தீபாவளி ஐப்பசித் திங்கள் தேய்பிறை சதுர்த்தசி திதியில் விரதம் இருக்க வேண்டும். அன்று உபவாசம் இருந்து சிவபிரானை வழிபடல் வேண்டும். மறுநாள் அமாவாசையன்று பாராயணம் செய்தல் வேண்டும். அதற்கு மறுநாள் வளர்பிறை பிரதமையிலிருந்து கந்தசஷ்டி விரதம் தொடங்கவேண்டும். பிரதமையன்று அதிகாலை நித்திரை விட்டெழுந்து, நதியாயின் நீரின் எதிர்ப்புறமாக நின்றும், கிணறு, குளங்களாயின் வடதிசை நோக்கி நின்றும், தண்ணீரிலே அறுகோணம் வரைந்து அதில் சடாக்ஷர மந்திரத்தை இடையிடையே பிரணவத்தை எழுதி அந்தத் தண்ணீரை சிவகங்கையாகப் பாவித்து நீராட வேண்டும்.

பின்னர் தோய்த்துலர்ந்த ஆடை உடுத்து அனுட்டானம் புரிந்து முருகவேள் ஆலயத்துக்குச் சென்று பூசனை புரிந்து பாடல்களைப் பாட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு ஐந்து நாட்கள் நோற்ற பின்பு ஆறாவது நாள் சஷ்டியன்று நீராடி முருகவேள் பாதாரவிந்தங்களைச் சேவித்தல் வேண்டும். அன்றிரவு ஆறு காலங்களிலும் முருகன் திருவுருவத்துக்கு ஆயிரத்தெட்டு மந்திரங்களை ஓதி மலரிட்டு அருச்சனை புரிதல் வேண்டும். ஏழாம்நாள் சப்தமி திதியன்று நீராடி வழிபாடு முடித்த பின் அன்னதானம் வழங்கி, பாரணைப் பூசைமுடித்து, உணவு உட்கொள்ள வேண்டும். அன்று பகல் உறங்கலாகாது.

ஆறு நாட்களிலும் பூரண உபவாசம் இருத்தல் நன்று. அவ்விதம் இருக்க முடியாதவர்கள் ஐந்து நாட்கள் பால், பழம் உண்டு, சஷ்டியன்றாவது முழு உபவாசமாக இருத்தல் வேண்டும். இதுவும் முடியாதவர்கள் ஐந்து நாட்கள் உச்சி வேளையில் இறைவனுக்கு நிவேதித்த உணவை உண்டு இரவு பட்டினியாக இருந்து, ஆறாவது நாள் முழுநாள் உபவாசமாக இருந்து வழிபடல் வேண்டும்.

இவ்வாறு சஷ்டி விரதம் இருப்போர் அளவிலா நலன்களைப் பெறுவர். காரிய சித்தி கிடைக்கும். இவ்விரதச் சிறப்பினைக் கந்தபுராணம் பின்வருமாறு கூறுகிறது.

> வெற்பொடும் அவுணன் தன்னை வீட்டிய னிவேற் செங்கை
> அற்புதன் தன்னைப் போற்றி அமரரும் முனிவர் யாரும்
> சொற்படு துலையின் திங்கள் அக்கலை பக்கந் தன்னில்
> முற்பகலாதியாக மூவிரு வைகல் நோற்றார்.

இவ்வாறு தேவர்கள் காரிய சித்தி பெற்று வரம் பெற்ற சிறப்புடையது இவ்விரதமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தர் சஷ்டி கவசம்

காப்பு

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம், நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை
அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

## நூல் நிலை மண்டில ஆசிரிப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல்நடனஞ் செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண வீரா நமோ நம
நிபவ சரஹண நிற நிற நிறென
வசர ஹணப வருக வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசுரர் குடிகெடுத்த ஐயாவருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலியாம் சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நண்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகு டைய திருவயிறு ந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளி பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகன
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுகுண டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்து முந்து முருகவேல் முந்து
என்தனை யாளும் ஏரகச் செல்வா!
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென் று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழிகளால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கையிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை ஆக
நாவிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வாலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அன்னரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும ஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுஉடல் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கைகால் முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகை சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்றுப் பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் போத்தொடு நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புரிதி
பக்கப் பிளவை படர் தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீ எனக் கருள்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈரேழ் உலகமும் எனக்கு றவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துறவாகவும்
உன்னைத்துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா!
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங் கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரட்சி அன்னமுஞ் சொர்ன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவ நீகுரு பொறுப்பது ன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்ற வளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையும் மாலையும் கருத்துட நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்து நீறணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றவர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெற்றி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்!

இவ்விதமான பயன்களை இவ்விரத அனுட்டிப்பினால் நாம் பெற்றுய்தலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

# சிவபுராணம்



———— * ————

## திருவாசகச் சிறப்பு

**திருச்சிற்றம்பலம்**

தொல்லை யிரும் பிறவிச் சூழும் தளை நீக்கி
அல்லல் அறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

———— * ————

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க

வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசன் அடிபோற்றி; எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி; சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி

ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓயஉரைப்பன்யான்

கண்ணுதலான் தன் கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழில்ஆர் கழல்இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய்; விளங்கொளியாய்
எண் நிறைந்து எல்லை இலாதானே; நின்பெரும்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரம்ஆகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்அடிகள் கண்டு இன்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா; விமலா; விடைப்பாகா வேதங்கள்
'ஐயா!' என ஓங்கி ஆழ்ந்த கன்ற நுண்ணியனே

வெய்யாய்; தணியாய்; இயமானனாம் விமலா
பொய்யாயின எல்லாம் போய்அகல வந்தருளி
மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கம் அளவிறுதி இல்லாய்: அனைத்துலகும்
ஆக்குவாய்: காப்பாய்; அழிப்பாய்: அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய்; நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய்: சேயாய்: நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய்: விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான்: வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழு அழுக்கு மூடி
மலம்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன் பாகிக் கசிந்துஉள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயவான தத்துவனே
மாசற்ற சோதி; மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே; தேன்ஆர் அமுதே: சிவபுரனே
பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில்வஞ்சங் கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேர் ஆறே
ஆரா அமுதே; அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே; உள்ளானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பருக்கு அன்பனே; யாவையும் ஆம் அல்லையுமாம்
சோதியனே; துன் அருளே; தோன்றாப் பெருமையனே
ஆதியனே; அந்தம் நடுஆகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே; நுணுக்கரிய நுண்உணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே; அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடர்ஒளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே; தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே; உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா! அரனே ஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்ஆனார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே, யோஎன்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்வார்
செல்வர் சிவபுரத்தின்: உள்ளார்சிவன டிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

தேவி துணை

ஓம் சக்தி

கௌரிக்காப்பு



## விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எக்குற்றமும் வாராமற்கா.

## வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடியமகி ஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையனைத்தே அருள்மாரி பொழிந்தானே,
வகையாற்றுப் படலமிதை வழிவழியாக் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தலைவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்த்திவோம் ஏத்துபுகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த
## திருப்பள்ளியெழுச்சி



திருச்சிற்றம்பலம்

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாயெனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 1

அருணன் இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணல்அங் கண்ணாம்
திரள்நிரை யறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே. 2

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளியொளி யுதயத்
தொருப்படு கின்றது விரும்பொடு நமக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 3

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூம்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 4

பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரி யாயெங்கள் முன்வந்(து)
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 5

இப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குநின் றார்அணங் கின்மண வாளா
செம்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 6

அதுபழச் சுவையென அமுதென அறிதற்
கரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவனவன் எனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு வுத்தரகோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளும் ஆறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயே. 7

முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னாவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தருளாயே. 8

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்உல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயே. 9

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தருளாயே. 10

**திருச்சிற்றம்பலம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை



திருச்சிற்றம்பலம்

1. ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்(டு)இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்.

2. பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடம்ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற்றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய்.

3. முத்தன்ன வெண்நகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்.

4\. ஒண்ணித் திலநகையாய் இன்னம்புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையில் முயிலேலோர் எம்பாவாய்.

5\. மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிநீ கடைத்திறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக்குழலி பரிசேலோர் எம்பாவாய்.

6\. மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்குந்தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய்.

7\. அன்னே யிவையுஞ் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னந்தீசேர் மெழுகொப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமுஞ்
சொன் னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்.

8. கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையே
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய்.

9. முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே யெமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையு மிலோமேலோர் எம்பாவாய்.

10. பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய்.

11. மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யாவெண் நீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்.

12. ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடுந்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தன்இவ் வானுங் குவலயமும் எல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய்.

13. பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தாற் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்து
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

14. காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவம் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவம் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

16. முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்து(உ)டையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்.

17. செங்கணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

18. அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற் போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேஇப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்(று)
அங்(கு) அப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்(கு) இப் பரிசே எமக்கெங்கோன் நல் குதியேல்
எங்கழிலென் ஞாயிறெமக்கேலோர் எம்பாவாய்.

20. போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிற்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய்.

**திருச்சிற்றம்பலம்.**

## வாழ்த்து

**திருச்சிற்றம்பலம்.**

வான்முகில் வளாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க, குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க, நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்.

**திருச்சிற்றம்பலம்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பொற்சுண்ணம்

முத்துநல் தாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன்ஐ யாறன் அம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் தொழுமின்எங் கோன்எங்கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே.

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்கு
ஏய்ந்தபொற் சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசணி மின்கள் உலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேசமுடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

அறுகெடுப் பார்அய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்க ணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெ டுக்கவொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கண் அப்பற்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்து நாமே.

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ணம் இடித்துநாமே.

சூடகந் தோள்வளை ஆர்ப்பஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
பாடக மெல்லடி யார்க்குமங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாட்டங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கைபொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற்க டைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கைநாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்தன்னை
ஐயனை ஐயர்பி ரானைநம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமுது எங்கள் அப்பன்
எம்பெரு மான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாய்இதழுந் துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம் பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்கும்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பெற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற் கரிய நலத்தைநந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கன் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோடு
ஆட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க னாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடி
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே.

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்ய அன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயன்தலை கொண்டுசென் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே.

வட்டமலர்க் கொன்றை மாலைபாடி
மத்தமும்பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம்ப லத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டு நின்றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்து நாமே.

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாய்இரு ளாயினார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயினாருக்கு
ஆதியும் அந்தமும் ஆயினாருக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவியின் இதயக்குமுறல்

என் வாழ்க்கைக்கு மெருகூட்டி
எனை வாழவைக்க நீ வந்தாய்
ஆனால்
ஏனோ அந்தக் கடவுளுக்கு
நீண்டகாலம் என்னுடன்
நீங்கள் வாழப் பிடிக்கவில்லை!

ஆண்டுகள் நாற்பத்தியிரண்டு
அருமைக் கணவனால்
ஆலோசனைகள் பல சொல்லி
அன்பை அள்ளித் தந்தீர்கள்
அதுகூட கடவுளுக்கு
பொறுக்கவில்லைப் போலும்!

உமது மறைவால்
என் இதயத்தின் சோக உணர்வுதனை
எடுத்துரைக்க வார்த்தைகள்
என்னிடமில்லை!
உமது பார்வை உமது சிரிப்பு
இவையெல்லாம் நினைவாக
நீங்கள் விட்ட பொக்கிஷங்கள்!

இனி உமை நான்
எங்கு காண்பேன்?
என்று காண்பேன்?
எப்பிறப்பில் நான் காண்பேன்?
உமது நினைவுகள் ஏக்கமாக
என் நெஞ்சில் நிலையாக நிலைத்துவிட
உமை நினைத்தே
என் மூச்சு உறங்கும்வரை
வாழ முயற்சிப்போம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது அருமை அப்பாவே!

காலமெல்லாம் எம்மை வளர்த்து
காவலாய் எமக்கிருந்து
காலனின் வரவை ஏற்று
கணப்பொழுதில் கலக்கம் ஏதுமின்றி
கலைந்து சென்றீரோ!

பாசத்தின் அரவணைப்பை
பிள்ளைகளாம் எமக்கூட்டி
பலபேரும் உமைபோற்ற
பணி பல சிறப்பாய் செய்து
பார்புகழ் நீங்கள் சென்றனையோ!

ஆழமாய் எம்மை எல்லாம்
ஆறாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு
அமைதியாய் உறங்கவென்று
அருமை அப்பா நீங்கள்
இறைவனிடம் சென்றனையோ!

ஆசையுடன் எம்மைப் பார்க்க
நாடுவிட்டு நாடுவந்து
பூரிப்பின் உச்சத்தால்
பாரினிலே வாழ்ந்தது போதுமென்றெண்ணி
பரிதவிக்க எம்மைவிட்டுச் சென்றனையோ!

என்றும் அப்பா நீங்கள்
இறைவன் பாதத்தில் அமர்ந்திருந்து
எம்மை வழிநடத்த
நாமும் உங்கள் நினைவைச்
சுமந்தே வாழ்ந்திடுவோம்.

**சுரேன்**

மூத்தமகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகன்மார் புலம்பல்

அப்பா என்று நாங்கள் அழைத்த
அவனியில் நீங்கள் இல்லையப்பா
ஆழ்கடல் தாண்டினாலும் அப்பா உங்கள்
அருமைக்குரல் காதில் ஒலிக்குதப்பா...............

அன்பான அப்பாவே எங்கு சென்றீர்கள்?
அழுது அழுது நாம் துடிக்கின்றோம் அருமைமிகு அப்பாவே
பொன் போன்ற உமதரிய உருவத்தை
இப்புவியில் நாம் இனி எப்போ எங்கே காணுவோம்?

தொலை தூரம் நாமிருந்து தொலைபேசி எடுக்கும் போது
மகனே! என்ற அமுதமொழி இனி நாம் கேட்பது எப்போது அப்பா!
அப்பா நீங்கள் கடைசி கடமைக்காக லண்டன் நகர் வந்தீர்களே

ஆறாது ஆறாது எங்கள் மனம் ஆறாதப்பா
மின் போன்ற வாழ்க்கைதனை நிஜம் என்று
நம்பி நாங்கள் அழுகின்றோமே பாரப்பா
நின் போல் நாமும் அங்கு வரும் வரையில்
கனிவோடு எமை காத்தருள்வாயப்பா
உம் ஆத்மா சாந்தி பெற இறையருளை
பணிவோடு வேண்டுகின்றோம் அன்பான அப்பாவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகன் புலம்பல்

எம் விடிவெள்ளியைத்
தொலைத்து விட்டோம்
மார்கழிப் பதினாறு
வெள்ளியிலே.........

பூநகரி G. M. என்று
சொன்னால் புரியாதோர்
யார் இருப்பார் அங்கே.
அறிவொழி தந்த அப்பா
உமக்கு அஞ்சலி
உரை செய்தேன் இப்போ......

இரைச்சலும் இடியுமாய்
பொழியுது பெருமழை
என் உள்ளத்துள்
கண்ணீருடன் கலந்த
உம் மரண ஓலத்தால்.........

ஏக்கமும் எதிர்பார்ப்பும்
தூக்கமின்றி தவிக்கயிலே
வழியொன்று எனக்கு
வருமென்று வழிமேலே
விழிவைத்த என் அப்பா
ஏன் விழி நொந்து
விடைபெற்றாயோ?

கதியொன்று தெரியாமல்
விதியென்று எண்ணி மனம் நோகும்
உன் முகம் காணா மகன் **கிரு**
இதயம் தவிக்கின்றேன்
உம் பிரிவால்............

**கிருசாந்தன்**

மகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகள்மார் புலம்பல்

பாசத்தின் திருவுருவாய் பண்பின் இருப்பிடமாய்
ஞாலத்தில் ஞாயிறுவாய் திகழ்ந்தீரே அப்பா!
சத்தியத்தின் வழிநின்று சகலதும் செய்ய
சாத்திரங்கள் பல சொன்னீரே அப்பா.

கடமையே கண்ணாகக் கொண்டு காலத்தின் கோலத்தை வென்று
கரடு முரடு பாதையெல்லாம் கடந்து வந்த நீங்கள்
காத்திராமல் சென்றதேனோ அப்பா
தவிக்கின்றோம் துடிக்கின்றோம் உம் பிரிவால் அப்பா!

எம்மையெல்லாம் பெற்றெடுத்து ஆளாக்கி
ஓர் தொழில் புரியும் அளவில் வைத்த நீங்கள் - எம் பிள்ளைகளுக்கும்
ஒளிச் சுடராய் இருந்து வழிகாட்டுவீர் என்றிருக்க
எம்மையெல்லாம் ஏமாற்றிவிட்டு எங்கே சென்றீர்கள் அப்பா!

தூரதேசம் சென்ற நீங்கள் திரும்பி வருவீர் என்றிருக்க
அனலாய் ஒரு செய்தி அடைந்தது எம்மை
உம் செய்தி கேட்டு கதிகலங்கிப் போனோம் அப்பா!
காத்திருக்க வைத்து விட்டு எங்கே சென்றீர் அப்பா!

கடைக்குட்டியின் பட்டமளிப்பு விழாவினை காண்பதற்காய்
லண்டன் மாநகரம் சென்ற நீங்கள்
கண்டுவிட்ட மகிழ்ச்சியில் காலனிடம் சென்றீரோ
கலங்குகின்றோம் கதறுகின்றோம் உம் முகம் காண அப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மையும் அம்மாவையும் தவிக்க விட்டு - நீங்கள்
தனி வழியில் சென்றதேனோ அப்பா
தாங்க முடியவில்லையே அப்பா உம்பிரிவை எம்மால்
அப்பா அப்பா என்று நாம் உங்களை அழைப்பது கேட்கவில்லையா?
ஒரு தரம் உங்கள் திருமுகத்தை காட்டுங்கள் அப்பா!

அப்பா நீங்கள் எங்களுக்கு!
உரிமையுடன் உங்கள் கடமையை செய்துவிட்டு
இருக்கும்வரை துணிவுடனே இருந்து விட்டு
நாம் உமக்கு கடமை செய்யும் நேரத்தில்
எம்மையெல்லாம் விட்டு எங்கு சென்றீர் அப்பா!

அப்பா நீங்கள் எம்மை விட்டு போகவில்லை - ஏனெனில்
எம் விழிகளில் உங்கள் புன்னகை கலந்த பூமுகம்
எம் செவிகளில் தெவிட்டாத உங்கள் இனிய குரல் ஓசை
எம் பிள்ளைகளின் நாமங்களில் கூட
உங்கள் நினைவலைகள் அப்பா.............





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள் புலம்பல்

உற்றதொரு உயிர்த்துணையாய்
உயர்ந்ததொரு உருவமாய்
நித்தம் எம்முயர்வை நினைவாகக் கொண்டவராய்
சித்தம் இனிக்கும் நல்ல சிந்தனையாளனாய்
எத்திக்கும் போற்றும் இமயமாய் இருந்தீரே
மருமக்கள் என்றால் மாமா என்றிருந்தோம்
மறைந்த மாயமென்ன மாண்புமிகு மாமாவே
அணையாத ஜோதியாய் என்றென்றும்
ஆண்டவன் அடியில் அகல் விளக்காய் மிளிர்ந்திட
வணங்குகின்றோம் பணிவுடன் நாம் இறைவனை!

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

நாவினிக்கப் பேசும் நல்லதொரு அம்மப்பாவே அப்பப்பாவே
நல்ல குணம் நாம் மறவோம் எமதருமை தாத்தாவே
பேரா பேத்தி என்று பெருமையுடன் அழைத்திடுவீர்
பேரானந்தம் கொண்டு பேசிடுவீர் மழலை மொழி.

கண்ணின் மணிபோல கருதி எமை வளர்த்தவரே
பின்னும் முன்னுமாய் பேணி எமைக் காத்தவரே
மண்ணில் வேரற்ற மரம்போல ஆனோமே
கண்விழித்து அழுகின்றோம் ஆறுதல் யார் தருவார்.

அன்புக்கு இலக்கணமாய் நீர் திகழ்ந்தீர் - இன்று
எம்மை நட்டாற்றில் தவிக்க விட்டு எங்கு சென்றீர்!
வேடிக்கையாகச் செய்தாலும் வேண்டுமென்றால் செய்தாலும்
நாம் செய்யும் எல்லா செயல்களிலும் முன்னின்று
எங்களுக்கு அறிவுரைகள் பலகூறி ஆதரித்தவரே
நின் ஆத்மா சாந்தியடைய தலை வணங்குகின்றோம் இறைவனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதர சகோதரிகள் புலம்பல்

பெரியண்ணா மூத்தண்ணா என்று நாங்கள் அன்புடன் அழைக்கும் எங்கள் குடும்பத்தின் மூத்த தலைவனே.

பதினொரு பேர் அடங்கிய பெரிய விருட்சம் எங்கள் குடும்பம். அந்த பெரிய விருட்சத்தின் பெரிய கிளையண்ணா நீங்கள். எத்தனை சூறாவளிக் காற்றிலும் சரியாது முறியாது நிமிர்ந்து நின்றவர் அண்ணா நீங்கள் ஆனால் இன்று தனிமரமாய்ச் சாய்ந்து விட்டீர்களே! ஏன் அண்ணா இப்படி?

காலன் அவன் விரித்த வலையில் எப்படி அண்ணா வீழ்ந்தீர்கள். அதிகாலை மூச்சைவிடும் நேரத்திலும் என்ன நினைத்தீர்களோ! நாம் ஒன்றும் அறியோம் அண்ணா.

ஐயாவும் அம்மாவும் எங்களை விட்டுப் போனபோதும் நீங்கள் இருக்கின்றீர்கள் என்று நாங்கள் ஆறுதல் அடைந்தோம். ஆனால் எங்கள் வேதனை தீர்த்து ஆறுதல் கூற தேடுகிறோம் அண்ணா நீங்கள் சென்ற வழியைப் பார்த்து வருவீர்களா மீண்டும்!

குடும்பம் என்ற கூட்டில் அனைத்து சகோதரர்களையும் அரவணைத்து சிரித்த முகத்துடனே கவலை துன்பம் தெரியாமல் உற்சாகமூட்டி வழிகாட்டியாய் நின்று வழிகாட்டியவரே எங்களை இடைவழியில் தவிக்க விட்டு எங்கே சென்றீர்கள்.

காரைநகர் மண்ணிலே தவழ்ந்து பூப்பூக்கும் நகராம் பூநகரி மண்ணில் புதுவாழ்வுடன் பொது வாழ்வையும் இணைத்து பலநோக்கங்கள் கொண்ட சங்கத்தின் பொது முகாமையாளராகப் பணியாற்றி பூநகரி மக்களின் நெஞ்சத்தில் இடம்பிடித்து பெருமையாய் வாழ்ந்தீர்களே! பொதுச்சேவை சமூகசேவையென்று களமறிந்து கடமையாற்றினீர்களே. இதனால் உங்களின் புகழும் உயர்ந்தது எங்களின் குடும்பமும் நிமிர்ந்தது.

பதவியால் உங்களுக்குப் புகழா? உங்களால் அந்தப் பதவிக்குப் புகழா என்று எங்களை வியக்கவைத்தது. ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவோடு நாரும் சேர்ந்து நறுமணம் வீசுவது போல் உங்களால் எங்களுக்கும் அந்தப் பெருமையும் புகழும் சேர்ந்தது.

குடும்பப்பற்றும் தேசப்பற்றும் தெய்வப்பற்றும் கொண்ட உண்மையான பற்றாளனாகி நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்று குடும்ப வாழ்க்கையிலும் நல்லதொரு மனைவி பேர் சொல்லும் பிள்ளைகள் என்று வழமான குடும்பத்தையும் அமைத்து தேசத்தை நேசித்தவர்களை நீங்களும் நேசித்து தேசியக்கனவுடனே வாழ்ந்தவர்கள் நீங்கள். இன்னும் வார்த்தைகளும் வரவில்லையே.

தாய்மண்ணில்தானே நான் சாவேன் என்று அடிக்கடி கூறுவீர்களே! ஆனால் இலண்டன் தேசத்து மண்ணிலே அதிகாலையிலே உங்கள் அசைவற்ற உடல்தானே இருந்தது. ஈரேழு நாட்கள் தனிமரமாய் மீளாத் துயில் கொண்டு உங்கள் பொன்னுடலை நெருப்பிலே நீறாக்கி நீண்ட பயணம் சென்றுவிட்டீர்களே! போன இடம்தான் எங்கே அண்ணா.

தேடுகிறோம் தேடுகிறோம் தாயகத்தில் வாழும் உங்கள் உடன்பிறப்புகளும் புலத்தில் வாழும் உங்கள் உடன்பிறப்புகளும் உங்களின் இழப்பை நினைத்து அழுகிறோம். எங்களின் அழுகுரல் உங்களுக்கு கேட்குமா அண்ணா நேற்று இன்று என்று ஒருமாதம் ஆகிவிட்டது. உங்கள் ஆத்மா நிச்சயம் இறைவனடி சேர்ந்து இருக்கும் என்ற நம்பிக்கையில் எங்கள் நெஞ்சத்தை தேற்றிக் கொள்கிறோம் தனெக்கென வாழாது பிறர்க்கென வாழ்பவர்கள் இப்பூமியிலே என்றும் வாழ்ந்து கொண்டே இருப்பார்கள்.

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு

என்ற வள்ளுவரின் குறள் வரிகளுக்கு பெருமை சேர்த்த பெருமகனாய் உங்களை நினைத்து எங்கள் அழுகையை நிறுத்தி நாங்கள் நிமிர்வு கொள்கிறோம். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

உங்கள் பிரிவால் துயருறும்
**உங்கள் உடன்பிறப்புக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்துனர் மைத்துனிமார் புலம்பல்

எவர்க்கும் இனியவனாய் ஏற்றமுடன் வாழ்ந்தீரே
வன்சொல்லோ நாமறியோம் வடிவாய் நின்று
வாய்மொழியில் காரியங்கள் வகையாய் செய்வீர்
எவர்வரினும் வரவேற்று இன்சொல் பேசி
எல்லோருக்கும் நல்லவைகள் நன்றே செய்தீர்கள்
மைத்துனர் மைத்துனி போல் பழகிடாது
சகோதர சகோதரி போல் பழகி எம்மிதயம் கவர்ந்தாய்
என்றைக்கும் உங்களைப்போல் இனியவரை
காண்மாட்டோம் இப்புவியில் உத்தமனே
அனைவரும் உயர அரும்பாடுபட்டு இப்புவியில்
பல நன்மை பலருக்குச் செய்தீரே
ஈசன் இணையடியை எம்மை விட்டு சென்றீரோ?

# உற்றார் உறவினர்கள் புலம்பல்

யார்க்கும் கேடெண்ணா நல்லிதயம் கொண்டவனே
பார்க்கும் இடமெல்லாம் பாசமுகம் தெரியுதையா
சிரிக்க சிரிக்கப் பேசி எம்மிதயம் கவர்ந்தவனே இனி
சிரிக்க வைக்க யாருமில்லை சொல்லியழ வார்த்தையில்லை.

ஊரில் உற்றதொண்டும் உற்றாருக்கின்னவென்றும்
எவரெவர்க்கும் உதவுவதை எப்பொழுதும் நினைத்திருந்தாய்
பாரினிலே வறுமையிலும் செம்மையாய் வாழ்ந்துகாட்டி
பாசம் என்றால் என்ன என்று வாழ்வினிலே உணர்த்தியவனே.

பார்த்தவரை பசிமாற வைத்துவிடும் உன் உருவம்
இனி யார் உருவம் பார்த்து கவலையை நாம் மறப்போம்
இவ்வுலகை வாழ்வை நீ வெறுத்தென்ன காரணமோ
அவ்வுலகை அழைப்பை நீ மறுக்க மறந்ததேனோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணையாத தீபம்

பாலா அண்ணா என்று பாசமுடன் அழைத்த உன்னை
இழந்து நிற்கும் இந்நிலையில்
எப்படி எடுத்துரைப்பேன் என்னுள்ளம் வெந்து தவிக்கிறது.
லண்டனிலே நீயிருந்த வேளையிலே நான் கதைத்ததேன் -
உனக்கு இந்த நிலை வருமென்று நான் எள்ளளவும்
நினைத்ததில்லை பள்ளிப்பருவம் முதல் பலகாலம் பழகியதால்
எதைச்சொல்லி அழுவதென்று ஏங்கித்தவிக்கின்றேன்.
காலையிலே நீ கடமைக்கு வரும் காட்சிதனை நினைக்கின்றேன்
மீசை தனை தடவிவிட்டு நீ மிடுக்காக நடந்து வந்தால்
வீதியிலே உன்னை ஒரு வீரனைப்போல் பார்த்திடுவேன்
பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் நீயிருந்து
பலபேரும் வாழ்வதற்கு பல்வேறு பணிசெய்தாய்
பணியாளர் வாழ்வினிலே பகலவனாய் நீயிருந்தாய்
ஏழைகளின் வாழ்வுக்காய் ஏற்றமுடன் பணிசெய்தாய்
சோதனைகள் வேதனைகள் வந்திட்ட வேளையிலும்
சோர்வின்றி பணிசெய்து சாதனைகள் நீ படைத்தாய்
அல்லும் பகலும் நீ அயராது பாடுபட்டு
சங்கத்தை வளர்த்தெடுக்க சலிக்காது நீ உழைத்தாய்
உன்னுழைப்பால் தான் அன்று சங்கம் உயர்ந்து வளர்ந்தன்றோ
இறைவன் மேல் நீ வைத்த இணையற்ற பக்தியினால்
ஆத்மீகத்தை வளர்ப்பதற்கு ஆர்வமுடன் செயற்பட்டாய்
ஆலயங்கள் வளர்வதற்கு அயராது பாடுபட்டாய்
பக்தி உணர்வதனைப் பலரிடமும் பரப்புதற்கு
பஜனைக்குழு அமைத்து பாடல்கள் பாடிவந்தாய்
உன்பாடல் கேட்டு ஊரவர்கள் மெய் மறந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்பணிகள் பற்றி ஒவ்வொன்றாய் சொல்வதெனில்
வருந்தி உரைத்தாலும் வாரங்கள் பலவாகும்
உன் உயிரை காலனவன் கவர்ந்திட்ட போதினிலும்
உன் நினைவு இவ்வுலகம் உள்ளவரை நிலைத்திருக்கும்
அதனால் தான் கூறுகின்றேன் நீ ஓர் அணையாத தீபம் என்று
நீ நல்லவன் வல்லவன் நாடு போற்றும் உத்தமன்
உள்ளதயே சொல்பவன் நல்லதையே செய்பவன்.

உன் ஆத்மா சாந்தியடையட்டும் உனக்கு இனி பிறப்பில்லை எல்லாம் வல்ல இறைவனின் சாம்ராச்சியத்தில் உன் ஆத்மா சென்றடைய எல்லாம் வல்ல அன்னை பராசக்தியை பணிந்து வேண்டுகின்றேன்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் மனைவி, பிள்ளைகள் மற்றும் உறவுகள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங் களை தெரிவித்து கொள்கின்றேன்.

49, இராணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

**திரு. க. வடிவேல் குடும்பம்**
(ஓய்வுபெற்ற அதிபர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை

*எமது சக ஆசிரியை திருமதி. மேகலை சாந்தரூபன்*
*அவர்களின் அன்புத் தந்தையார்*

**அமரர். நல்லதம்பி பாலசுப்பிரமணியம்**

உயிரிலே உனைக் கலந்து
ஊர்தனை மாற்றி நின்றோம்
இடர்களை தந்தை என்று வேண்டி
நிற்போம் எங்கும் முதல்வரே
நீ எங்கு சென்றாய் காக்க மறந்து

நெஞ்சமே அலையாய் மோத
கண்களில் குருதியே பாயவைத்தாய் ஏனோ
இரக்கமில்லாத அரக்கத்தனத்தாலே
வாழும் காலத்தில் வழிப்பறியாய்
உயிப் பறித்தானோ இன்று

தேவைகள் ஆயிரம் சேவைகள் தானிருக்க
பாவிகள் ஆக்கிவிட்ட பாதகம் ஏனோசொல்
அமைதியின் திருவுருவாய் நின்ற
அன்பெனும் கருணை கொண்ட நீயே ஆறுமோ நெஞ்சம்

காத்திருக்கும் காலம் என்றால் கேட்கவில்லை
காலனவன் காவுகொண்டான் வாழ்வு போதுமென்று.
அன்னாரின் பிரிவால் துறருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த

அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

**பாடசாலை சமூகம்**
கிளி/பூநகரி மகாவித்தியாலயம். பூநகரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

**அமரர். நல்லதம்பி பாலசுப்பிரமணியம்**

*(முன்னாள் ஸ்ரீ முருகன் ஆலயபரிபாலன சபைத்தலைவர்)*

தன்நலம் அற்ற தகைமை நூல் தலைவன்
தரணி போற்றும் பாலசுப்பிரமணியன்
ஆலயம் கட்டி அறப்பணியாற்றி
மாநிலம் போற்றும்நேரில் சேவைகளைய்
நித்தியானந்தப் பெருவாழ்வெய்தினன்.

காரைநகர் யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் 1991ம் ஆண்டு தொடக்கம் பல்லவராயன் கட்டு பகுதியை வசிப்பிடமாகவும் உடைய அமரர். நல்லதம்பி பாலசுப்பிரமணியம் அவர்கள் பலநோக்கு கூட்டுறவுச்சங்கம், கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசம், ஆகியவற்றின் முகாமையாளராகவும், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சபை, ஆலயபரிபாலன சபை புனர்வாழ்வுக் கழகம், இந்து இளைஞர் பேரவை போன்ற பல நிறுவனங்களில் தலைவராக, செயலாளராக நிர்வாக உறுப்பினராக இருந்து சமூகத்திற்கு அளப்பரிய சேவையாற்றியுள்ளார். இவற்றில் ஜெயபுர முருகன் ஆலய பரிபாலன சபை தலைவராகவும் போசகராகவும் இருந்து ஆலயத்தின் வளர்ச்சியிலும் நித்திய, நைமித்திய கிரிகைகள் குறையின்றி நடைமுறைப்படுத்துவதிலும் கண்ணும் கருத்துமாக இருந்து சிறந்த சேவையாற்றி 2011-12-16ம் திகதி அமரத்துவம் அடைந்துவிட்டார். அன்னாரை இழந்து துயருறும் அவரின் மனைவி, பிள்ளைகள், உறவினர்களுக்கு எமது முருகன் ஆலயத்தின் பரிபாலன சபையினராகிய நாம் அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்தவர் களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

**ஆலய பரிபாலன சபை,**
ஸ்ரீ முருகன் ஆலயம்.
ஜெயபுரம். பூநகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவெழாத நன்றிகள்

*"காலத்தினால் செய்த நன்றி சிறிது எனினும்
ஞாலத்தின் மாணப்பெரிது."*

**எ**ம் குடுமபத்தின் மூல உருவான எமது அப்பா திரு. நல்லதம்பி பாலசுப்பிரமணியம் அவர்கள் வைத்திய சாலையில் அனுமதித்து அவர் அமரத்துவம் அடைந்த செய்திகேட்டு எமது துயரில் வந்து பங்கு கொண்டும் அவரது உடலை உரிய இடத்தில் வைத்து பாதுகாக்க அவ்வப்போது எமக்கு ஆலோசனைகள் கூறியவர்களுக்கும் உதவிகள் புரிந்தவர் களுக்கும் தொலைபேசியில் ஆறுதல் கூறியோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அமரரின் இறுதிக் கிரியையின் போது சகல வழிகளிலும் உதவி செய்தோர்களுக்கும் அதில் பங்கு கொண்டு அஞ்சலி செலுத்தியோருக்கும் தாய்நாடான சொந்த பூமியில் அவரின் உடல் வருமென ஆவலுடன் எதிர்பார்த்து வேதனையுடன் வாடிநின்ற உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அவரது அலுவலக ஊழியர்கள் அனைவருக்கும் மற்றும் பத்திரிகைகளில் அஞ்சலி செய்திகளை வெளியிட்டோருக்கும் தந்தையின் முகத்தை பார்க்க துடித்து தாங்கொணாத் துயரில் தவித்த பெண்பிள்ளைகளுக்கும் உறவினர்களாய் நின்று ஆறுதல் கூறி அந்த நாட்களுக்குள் உணவுகள் தந்தும் வேறு அனைத்து வழிகளிலும் உதவி புரிந்து அனைத்து உறவுகளுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



**இங்ஙனம்**
**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குலவிருட்சம்

※நல்லதம்பி + ※சிவயோகம்

- **பாலசுப்பிரமணியம்**
- ஜெயலக்சுமி
- ராசலக்சுமி
- விஜயலக்சுமி
- பாக்கியலக்சுமி
- மகாலக்சுமி
- சுப்புலக்சுமி
- வரதலக்சுமி
- கிஸ்ணபவான்
- கங்காதரன்
- தயா

**பாலசுப்பிரமணியம்**
+
சிவமலர்

சுரேஸ்குமார் + தேவசுந்தரி
- அபிராம்
- அனுராம்
- அனந்தராம்

வாசுகி + தியாராஜா
- டினோஜா
- அபிசாயி

தேவகி + சண்முகதாசன்
- கேனுஜா
- கேனிசன்

மேகலை + சாந்தரூபன்
- கோமதன்
- கேஷா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* வேலுப்பிள்ளை + * சின்னப்பிள்ளை

* தெய்வானைப்பிள்ளை

சரஸ்வதி

சிவமலர்

* அமரதாஸ் கீதாஞ்சலி சுகிர்தன் கிருசாந்தன் சுதர்சன்

* அமரர்களைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



முருகனே செந்தில் முதல்வனே மாயோன் மருகனே
ஈசன் மகனே ஒருகைமுகன் தம்பியே
நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் யான்.

Happy Graphics, Col-13. Tel: 077-3543618

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org